விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka.*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 ஐப்பசி 18 ஞாயிற்றுக்கிழமை (04.11.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 320




# என் அன்புத்தம்பி தமிழ்ச்செல்வன்

# விடுதலைக்காய் உழைத்த இலட்சிய நெருப்பு

## தலைவர் பிரபாகரன் விசேட அறிக்கை

(கிளிநொச்சி)

**தமிழுலகம் ஆழமாக நேசித்த ஒரு அரசியல் தலைவனை சிங்கள தேசம் இன்று சாகடித்திருக்கிறது என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கை வருமாறு;

தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப்புலிகள்,
தமிழீழம்.03.11.2007

எனது அன்பான மக்களே!

சமாதான வழியில் நீதியான முறையிலே எமது மக்களது தேசியப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காணுமாறு அனைத்துலகம் அடுத்தடுத்து அழைப்பு விடுத்தபோதும் சிங்கள தேசத்திலிருந்து நல்லெண்ணம் வெளிப்படவில்லை.

பௌத்தத்தின் காருண்யத்தை காணமுடியவில்லை. சிங்கள தேசம் தனது இதயக் கதவுகளை திறந்து சமாதானத் தூதும் அனுப்பவில்லை. மாறாக போர்க் கழுகுகளை ஏவி இராட்சதக் குண்டுகளை வீசியிருக்கிறது. எமது அமைதி புறாவை கொடூரமாக, கோரமாக, கொன்றொழித்திருக்கிறது. தமிழ் உலகமே ஆழமாக நேசித்த ஒரு அரசியல் தலைவனை சிங்கள தேசம் இன்று சாகடித்திருக்கிறது. தமிழீழ மக்களின் (08 ஆம் பக்கம் பார்க்க)



# தமிழ்ச்செல்வனின் மறைவுக்கு

# அரசுக்கு தக்க பதிலடி கொடுப்போம்!

## விடுதலைப்புலிகள் அறிவிப்பு

(லண்டன்)

**விமானப் படையின் வான் தாக்குதலில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கொல்லப்பட்டமைக்கு தக்க பதிலடி கொடுப்போம் என விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.** (08 ஆம் பக்கம் பார்க்க)

## முதல்வர் கருணாநிதி இரங்கல்

(சென்னை)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் மறைவுக்கு தமிழ் நாடு முதல்வர் கலைஞர் கருணாநிதி இரங்கல் தெரிவித்துள்ளார். தமிழக அரசின் சார்பில் முதல்வர் கருணாநிதியினால் வெளியிடப்பட்ட இரங்கல் செய்தி கவிதை வடிவில் அமைந்துள்ளது. கருணாநிதி எழுதிய இரங்கல் பா வருமாறு;

## தமிழ்ச்செல்வனின் மறைவு

## ஐந்து போராளிகளின்

## தமிழ்ச்செல்வனின் மறைவு எரிக்சொல் ஆழ்ந்த கவலை

(நோர்வே)

அமைதி முயற்சிகளில் நாம் அனுசரணையாளராக செயற்பட விடுதலைப்புலிகளுக்கும் நோர்வே அரசாங்கத்துக்கும் இடையேயான முக்கிய தொடர்புமையமாக தமிழ்ச்செல்வன். விளங்கினார். இலங்கையின் தற்போதைய போர் நிலைமைகளின் விளைவுகள் தொடர்பாக ஆழ்ந்த கவலை கொள்கிறோம். இவ்வாறு பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனின் மறைவு குறித்து நோர்வேயின் என்.ரி.பி.செய்தி நிறுவனத்துக்கு எரிக்சொல் ஹெய்ம் கருத்து தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் தற்போதைய் நிலைமைகளின் எதிர்விளைவுகள் குறித்து நோர்வேகவலை கொண்டுள்ளதாகவும் அவர் (08 ஆம் பக்கம் பார்க்க)

## ஐந்து போராளிகளின் இறுதிச் சடங்கு நேற்று நடந்தது


பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் வீரச்சாவடைந்த லெப். கேணல் அலெக்ஸ், மேஜர் மிகுதன், மேஜர் கலையரசன், லெப். ஆட்சிவேல், லெப்.மாவைக்குமரன் ஆகிய ஐந்து மாவீரர்களின் வித்துடல்கள் நேற்று முழுமரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது.

முன்னதாக ஐந்து மாவீரர்களின் வித்துடல்கள் மாவீரர்களின் இல்லங்களில் இருந்து இராணுவ மரியாதையுடன் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டது. கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நேற்று முற்பகல் 9.30 மணியளவில் வட்டப் பொறுப்பாளர் சரவணன் தலைமையில் வீரவணக்க நிகழ்வு நடைபெற்றது. பொது ஈகச்சுடரை வவுனியா மாவட்ட கட்டளைத் தளபதி வேலவன் ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் வித்துடல்களுக்கு மாவீரர்களின் பெற்றோர், உறவினர்கள் மலர் மாலை அணிவித்து (08 ஆம் பக்கம் பார்க்க)

பட்ட இரங்கல் செய்தி கவிதை வடிவில் அமைந்துள்ளது. கருணாநிதி எழுதிய இரங்கல் பா வருமாறு;

*எப்போதும் சிரித்திடும் முகம்–*
*எதிர்ப்புகளை எரித்திடும் நெஞ்சம்!*
*இளமை இளமை இதயமோ*
*இமயத்தின் வலிமை! வலிமை!*
*கிழச்சிங்கம் பாலசிங்கம் வழியில்*
*பழமாய் பக்குவம்பெற்ற படைத் தளபதி!*
*உரமாய் தன்னையும் உரிமைப் போருக்கென உதவிய*
*உத்தம வாலிபன்–உயிர் அணையான்*
*உடன் பிறப்பனையான்*
*தமிழர்வாழும் நிலமெலாம்*
*அவர்தம் உளமெலாம்*
*தன்புகழ் செதுக்கிய செல்வா–எங்கு சென்றாய்?*

என்று அதில் கூறப்பட்டுள்ளது. (ந-5)





விமானத்தாக்குதலில் வீரச்சாவடைந்த பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் ஏனைய ஐந்து போராளிகளுக்கும் மக்கள் அஞ்சலி செலுத்துவதை படங்களில் காணலாம்...

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# பிரிகேடியர் தமிழ்ச்செல்வனின் மறைவு சர்வதேச ஊடகங்களின் பார்வையில்

**பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனின் வீரச்சாவுக்கு அனைத்துலக ஊடகங்கள் தமது இரங்கலைத் தெரிவித்துள்ளன. அவற்றில் சில வருமாறு;**

**றொய்ட்டர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி:**

எப்போதும் புன்னகை பூத்த முகத்துடன் கவரக்கூடிய வகையிலான உடைகளை உடுத்தியவராக புலிகளுக்கும் வெளி உலகத்திற்கும் பிரதான தொடர்பாளராக இருந்தவர் சு.ப.தமிழ்ச்செல்வன். தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகளின் 'பொதுமக்களுக்கான' முகமாக சு.ப.தமிழ்ச்செல்வன் இயங்கினார்.

தமது விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலில்தான் சு.ப.தமிழ்ச்செல்வன் இறந்ததாக அரசாங்கம் தெரிவித்த போதிலும் விடுதலைப் புலிகளை மிகவும்கடினமானதொரு நிலைக்கு- உள்நாட்டு யுத்தத்தை இக்கட்டான நிலைக்கு இலங்கை அரசாங்கம் தள்ளியிருப்பதாக அரசியல் நோக்கர்கள் மற்றும்இராஜதந்திரிகள் கருதுகின்றனர்.

2006 ஆம் ஆண்டு றெய்ட்டருக்கு தமிழ்ச்செல்வன் அளித்த நேர்காணல் ஒன்றில் 'ஒரு 16 வயதுச் சிறுவனை இராணுவம் படுகொலை செய்கின்ற போது அவனது சகோதரனிடம் போய்... உனக்கு 18 வயது ஆகவில்லை என்பதால் வன்முறைப்பாதைக்குப் போகாதே என்று சொல்ல முடியாது' என்று கூறியதாகத் தெரிவித்து தனது இரங்கல் செய்தியை றொய்ட்டர் நிறைவு செய்திருக்கின்றது..

**பி.பி.சியின் இரங்கல் செய்தி:**

ஒரு கொடூரமான இராணுவ மனிதராக எதிரிகள் அவரைக் கூறுகின்ற போது எப்போதுமே புன்னகை பூத்தவராக நட்புறவுடன் பழக்கூடியவர் அவர், ஒரு தலைசிறந்த கெரில்லாப் போராளியைப் போல் அவரது உடை இருந்ததே இல்லை. ஒரு நிர்வாக அதிகாரியைப் போல் உடையுடுத்தி பேச்சு மேசைகளில் அவர் பங்கேற்றிருந்தார்.

தமிழீழம் ஒரு நாள் மலரும் என்ற அந்தக் கனவுக்காக தன்னை அர்ப்பணித்திருந்தவர். 2004 ஆம் ஆண்டு டிசம்பரில் ஆழிப்பேரலை ஏற்பட்ட பின்னர் பி.பி.சியின் தமிழ்ச் சேவையை தொலைபேசியில் தொடர்பு கொண்டு போராளிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் என்ன நடக்கிறது என்பதை விபரித்தார்.

போராளிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளின் புனர்வாழ்வுப் பணிகளை அவர் பார்வையிட்டார். அவரது நடவடிக்கைகளால் பல தரப்பும் அவரைப் புகழ்ந்தன. தந்திரோபாய முக்கியத்துவம் வாய்ந்த யாழ்ப்பாணப் பிரதேசத்தின் தளபதியாகவும் அவர் பணிபுரிந்துள்ளார்.

1993 ஆம் ஆண்டு போர்க்களத்தில் காயமடைந்தபின்னர் அரசியல் பொறுப்பு அவருக்கு அளிக்கப்பட்டது. இந்தக் காலகட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு இராணுவ இயக்கமாக அறியப்பட்டு மெதுவாகத்தான் அரசியலுக்குள் நுழைந்து கொண்டிருந்தமையால் அது பாரிய சவாலான பணி. அதனை ஏற்றுக் கொண்டு 1994 -1995 ஆம் ஆண்டு அரசாங்கத்துடனான நேரடிப் பேச்சுக்களுக்கு தலைமை வகித்தார்.

அனைத்துலக ஊடகங்களை எப்படி கையாள்வது என்பதை அவர் அறிந்திருந்தார்.

**ஜின்குவ: (சீனா)**

சு.ப.தமிழ்ச்செல்வனின் மரணமானது இலங்கையின் பெரும்பான்மைச் சிங்களவர்கள் கொண்டாடக் கூடிய ஒன்றாக இருப்பினும் இலங்கையின் அமைதி முயற்சிகளில் பாதிப்பை ஏற்படுத்தும்.

இதற்குப் பதிலடியாக புலிகள் நடவடிக்கை மேற்கொண்டால் இலங்கை. இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது மிகவும் கடினமானதாகிவிடும்.

**கார்டியன்: (பிரித்தானியா)**

இலங்கையின் விமானக் குண்டுத் தாக்குதலில் புலிகளின்அரசியல்துறைத் தலைவரும் அமைதிப் பேச்சுக்குழுவின் தலைவருமான தமிழ்ச்செல்வன் இறந்தமையானது இரத்தக்களரியான ஒரு முழு அளவிலான யுத்தத்திற்கு அந்தத் தீவு திரும்பப் போகிறது என்பதை உறுதி செய்துள்ளது.

சு.ப.தமிழ்ச்செல்வன் (வயது-43) புத்திசாலியான புலிகளின் வெளி உலக முகமாவார். சு.ப.தமிழ்ச்செல்வன் ஒரு முக்கிய நபராவார். அமெரிக்கா, பிரித்தானியா ,இந்தியா ஆகியன புலிகளை ஒரு பயங்கரவாத இயக்கமாக அறிவித்தாலும் கூட இலங்கையின் வடக்கு காட்டுப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள போராளிகளின் சமாதானச் செயலகத்தில் இராஜதந்திர உறவுகளை அரங்கேற்றியவர்.

அவர் வீரராகவும் அதேசமயத்தில் நற்சிந்தனையாளரான தமிழ்ச்செல்வன் போர்க்களத்தில் இரண்டுமுறை காயமடைந்தவர். ஊடக மகாநாடுகளுக்கு ஊன்றுகோல் உதவியுடன் வருவார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்களை ஒவ்வொருவராக அழிப்போம் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சகோதரரான பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இலங்கை மூழ்கப்போகிறது என்பதை கோடிட்டுக் காட்டுவதாக இத்தகைய பேச்சுக்கள் உள்ளன. அயர்லாந்தைவிட பெரியதானதாக இல்லாதிருக்கும் அந்தக் கண்ணீர்த்துளி வடிவிலான தேசம் போரினால் மனித உரிமை மீறல்களால்-சித்திரவதைகளால்-கடத்தல்களால்-நீதிக்கு புறம்பான படுகொலைகளால் பாதிப்படைந்துள்ளது.

இப்போது புலிகளின் கையில் 'பந்து' மீண்டும் சிக்கியுள்ளது. தமது நிலைப்பாட்டை இந்த மாதத்தின் பிற்பகுதியில் மாவீரர் நாள் உரையின் போது வே. பிரபாகரன் வெளிப்படுத்துவார். எதிர்வரும் சில வாரங்களுக்கு புலிகளின்



பேரிழப்புக்களை ஏற்படுத்தும் எதிர்வினைக்கு அரசாங்கம் முகம் கொடுக்கும்.

**வொய்ஸ் ஓஃப் அமெரிக்கா:**

இத்தகையதொரு மூத்த தலைவரின் இழப்பை புலிகள் இலகுவானதாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள்.

**என்.டி.டி.வி தொலைக்காட்சி: (இந்தியா)**

வெளி உலகுடனான புலிகளின் தலைமைப்பீட தொடர்பாளராக இருந்தவர் தமிழ்ச்செல்வன் நாளாந்தம் சமாதானத் தூதுவர்கள், இராஜதந்திரிகள், மனிதாபிமானப் பணியாளர்களை சந்தித்துக் கொண்டிருந்தவர்.

அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட சில அனைத்துலக ஊடகவியலாளர்களுக்கு நேர்காணல் அளித்தவர். ஜெனீவா பேச்சுக்களுக்கு தலைமை வகித்தவர் . புலிகளின் படையணியின் உயரிய தரமான பிரிகேடியர் தரத்தைப் பெற்றுள்ளார்.

இவ்வாறு சர்வதேச ஊடகங்கள் தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளன. (ந-5)

## விடுதலைப் புலிகளின் முகாம்கள் மீதே விமானத் தாக்குதல் நடத்தப்படுகிறது

### தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு

(கொழும்பு)

சாதாரண தமிழ் பொதுமக்களின் மீது தாக்குதல் நடத்துவது விமானப் படையினரின் நோக்கமல்ல. பயங்கரவாத யுத்தத்தை முடிபுக்கு கொண்டுவருவதே படையினரின் இலக்காகும் என தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் லக்ஷ்மன் ஹுலுக்கல்ல தெரிவித்துள்ளார்.

விமானப் படையினர் (நேற்றுக்காலை) நடத்திய தாக்குதலில் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் கொல்லப்பட்டமை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.அவர் மேலும் கூறியுள்ளதாவது,

விமானப் படையினரின் தாக்குதலில் தமிழ்ச்செல்வன் உட்பட புலி உறுப்பினர்கள் ஆறுபேர் உயிரிழந்துள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

புலிகளின் பயிற்சி முகாம்கள், ஆயுதக் களஞ்சியங்கள்,கரும்புலி முகாம்கள்,கடற்புலி முகாம்கள் போன்ற பிரதான இடங்கள் மீதும் மற்றும் இராணுவத்தினருக்கு உதவி வழங்குவதற்காகவுமே விமானப் படையினர் எப்பொழுதும் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

புலிகளின் தாக்குதலுக்கு வழிகாட்டல் வழங்கிக் கொண்டிருக்கையிலேயே தமிழ்ச்செல்வன் (நேற்றுத்) தாக்கப்பட்டார். இவர் எமது படையினருக்கு எதிராகவும் இலங்கை அரசுக்கு எதிராகவும் சர்வதேச ரீதியில்அறிக்கை விடுத்துக் கொண்டு புலிகளுக்குச் சார்பாக பிரசாரம் மேற்கொண்டு வந்த ஒருவராவர்.

அநுராதபுர விமானப் படைத்தளத்தின் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலினால் விமானப் படையினர் நலிவடையவில்லை. இந்தத் தாக்குதலின் பின்னர் விமானப் படையினர் உளவியல் ரீதியில் பலமடைந்துள்ளனர் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

## காங்கேசன்துறைப் பொலிஸாரால் தமிழக மீனவர்கள் 97 பேர் கைது

இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி உட்பிரவேசித்து மீன் பிடித்ததாக கூறி தமிழக மீனவர்கள் 97 பேரை கைது செய்து காங்கேசன்துறைப் பொலிஸார் மல்லாகம் மாவட்ட நீதிமன்றல் நேற்று ஆஜர்படுத்தினர்

குறித்த 97 தமிழக மீனவர்களும் நேற்று முன்தினம் இரவு காங்கேசன்துறை கடற் பகுதியில் அத்து மீறி உள்நுழைந்து மீன் பிடித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி 97 மீனவர்களையும் எதிர்வரும் 12 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு காங்கேசன்துறை பொலிஸாருக்கு மல்லாகம் மாவட்ட நீதிவான் சரோஜினி இளங்கோவன் உத்தரவிட்டார். (ந-5)

## அறிமுகப் படக்காட்சி

கலாபூஷணம் சு.துரைசிங்கம் அவர்களின் வசன அமைப்பிலும், எஸ்.கோணேஸ்வரனின் நெறியாள்கையிலும் பாமா கிறியேசன் அளிக்கும் 'இந்து தர்மத்தில் பத்துக்கள்' சின்னத்திரை விருந்து அறிமுகப் படக்காட்சி இன்று பிற்பகல் 2 மணிக்கு சுன்னாகம் ஐயனார் கல்யாண மண்டபத்தில் ஏழாலை வடக்கு அ.மி.த பாடசாலை அதிபர் த.வாமதேவன் தலைமையில் நடைபெறும். (ந-5)

## பாலியல் வல்லுறவுக் குற்றச்சாட்டு ஐ.நா.அமைதிப் படையிலிருந்து 108 இலங்கைப்படையினர் நீக்கம்

(ஜெனீவா)

பாலியல் வல்லுறவுக் குற்றச்சாட்டுக்ளைத் தொடர்ந்து அமைதிப்படையில் இடம்பெற்றிருந்த 950 இலங்கைப் படையினரில் 108 பேரை இலங்கைக்கு ஐ.நா. திருப்பி அனுப்பியுள்ளது. இது தொடர்பாக ஐ.நா.பேச்சாளர் மைக்கேல் மொண்டஸ் கூறியதாவது,

ஹெய்ட்டியில் அமைதிப்படையில் இடம் பெற்றிருந்தோர் மீதான பாலியல் குற்றச்சாட்டுக்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபையும் இலங்கை அரசாங்கமும் மிகவும் கவலையடைகிறது.

வயது குறைந்த சிறுமிகளுக்கு பணம் கொடுத்து இக்கொடூரச் செயலை இலங்கைப் படையினர் செய்துள்ளனர் இக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக 108 இலங்கைப் படையினர் அவர்களின் நாட்டிற்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

அவர்கள் மீது விசாரணைகள் நடத்தப்படும் என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது. குறித்த படையினரால் பாதிக்கப்பட்டோருக்கு ஐ.நா.உதவும் என்றார் அவர். (ந-5)

## மன்னார் கட்டுக்கரைக்குளம் கைப்பற்றப்பட்டதாக வெளிவந்த செய்திக்கு இளந்திரையன் மறுப்பு

(கிளிநொச்சி)

மன்னார் கட்டுக்கரைக்குளத்தினை நேற்று முன்தினம் கைப்பற்றியதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஒலிபரப்பாகிய செய்திக்கு விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒலிப்பரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஒலிபரப்பாகிய அச்செய்தி தொடர்பில் அவர் கூறியதாவது;

எமது அரசியல்துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் வீரச்சாவடைந்ததைத் தொடர்ந்து அரசாங்கம் மன்னார் கட்டுக்கரைக்குளம் பகுதியை கைப்பற்றிவிட்டதாக அறிவித்துள்ளது.

இது முற்று முழுதான பொய்ச் செய்தி என்பதுடன் நேற்று மதியம்வரை நான் அப்பகுதியில் நின்று பணிபுரிந்து விட்டு வந்துள்ளேன்.

போர் நிறுத்த காலத்திற்கு முன்னர் இருந்த அதே நிலைகளிலேயே தொடர்ந்தும் எமது போராளிகள் நிலை கொண்டுள்ளனர் ஆகவே இது போன்ற அரசாங்கத்தின் பொய்ச் செய்திகளை கேட்டு மக்கள் குழப்பமடைய வேண்டாம் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ந-5)

**விற்பனைக்கு**

யாழ்.சுதுமலை தெற்கில் சம்பந்தர் ஒழுங்கையில் மிகப் பாதுகாப்பான கௌரவமான குடும்பங்கள் வாழும் சூழலில் ஒரு வீடு காணியுடன் விற்பனைக்குண்டு. பார்வையிடவும். நேரில் விலை பேசிக் கொள்ளவும். காலை வேளையில் தொடர்பு கொள்க.

K.சீவறட்ணம்
சம்பந்தர் ஒழுங்கை,
சுதுமலை தெற்கு.

(503)

# சு.ப.தமிழ்ச்செல்வனின் மறைவும் தலைவர்களின் உணர்வலைகளும்

## தமிழ்ச்செல்வனின் இழப்பு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது

### தமிழ்க் கூட்டமைப்பு அறிக்கை

விமானப் படையின் வான் குண்டுத்தாக்குதலினால் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட செய்தி அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர், தளபதி சு.ப.தமிழ்ச்செல்வன் வன்னி நிலப்பரப்பில் அரசு நிகழ்த்திய வான் குண்டுவீச்சுக்கு இலக்காகி வீரமரணத்தைத் தழுவிக்கொண்டார் என்ற செய்தி எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கிறது.

நம்பமுடியவில்லையென்றாலும்,செய்திகள் நம்ப வைத்து விட்டன. தமிழீழ தேசத்தின் விடுதலைக்கு மேலும் மிக உயர்ந்த தியாகம் அர்ப்பணிக்கப்பட்டிருக்கின்றது. அவருடன் இன்னும் ஐந்து விடுதலைப் புலிகள் மடிந்திருக்கிறார்கள். தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒப்பற்ற இத் தியாகத்தை ர்ந்துள்ளமைக்காக, எம் வீரவணக்கத்தைச் செலுத்தி நிற்கின்றோம்.

இந்த அளப்பரிய தியாகத்தினால் இன்னும் ஆயிரமாயிரம் தமிழ்ச்செல்வன்கள் உருவாகுவார்கள்.தமிழீழ விடுதலைக்குத் தம்மை அர்ப்பணிப்பார்கள் என்பது உறுதி. ஆனால் சிங்கள அரசின் இச் செய்கையின் பின்விளைவுகள் பாரதூரமானதாய் இருக்கப் போகின்றது.

தமிழீழத் தேசபக்தர்களும், தமிழீழ விரும்பிகளும் அமைதியாகத் தங்கள் வீரவணக்கத்தையும் அஞ்சலியையும் செலுத்துமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இது சம்பந்தமான விரிவான அறிக்கையை விரைவில் வெளியிடும் என்று மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனின் இழப்பு பெரும் அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளதாக தமழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செ.கஜேந்திரன் மற்றும் பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

## தாங்கொணா துயரடைகின்றோம்

### யாழ்.மாவட்ட பொது அமைப்புகள் ஒன்றியம்

தமிழ் மக்களின் அரசியற்துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனின் வீரச்சாவையிட்டு பொது அமைப்புக்களின் ஒன்றியத்தினராகிய நாம் மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்துள்ளோம்.

ஏதிலிகளாகிய எங்களின் அரசியல் முகம் பறிக்கப்பட்டுள்ளது. அவரோடு சேர்ந்து வீரச்சாவடைந்த 5 போராளிகளையும் மனதிலிருத்தி எங்கள் வீர வணக்கங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்:

பிரிகேடியர் தமிழ்ச்செல்வன் 1984ஆம் ஆண்டு போராளியாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தன்னை இணைத்து ஆரம்பப் பயிற்சிகளை இந்தியாவில் முடித்தவர். அதன் பின்னர் 1987ஆம் ஆண்டு தென்மராட்சி கோட்டத் தளபதியாகவும்,1991இல் யாழ்.மாவட்ட சிறப்புத் தளபதியாகவும் 1993 ஆம் ஆண்டு தமிழீழ அரசியற்றுறைப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டு கடந்த 23 வருடங்களாக தேசியத் தலைவரோடு தோளோடு தோள் நின்று விடுதலைப் போராட்டத்துக்கு அயராது உழைத்த மூத்த முதன்மைப் போராளி அவர்.

ஆரம்ப நாட்களில் தென்மராட்சிப் பிரதேசத்தில் தினேஷ் என்ற பெயருடன் ஆரம்பித்த அவரது விடுதலை வாழ்வின் நீட்சி ஆழமானது. அற்புதமானது.

தமிழ் மக்களுடைய விடுதலைப் போராட்டத்தினை மக்கள் மயப்படுத்தியும் எல்லா மக்களை யும் அணி திரட்டுவதிலும் தமிழ்ச்செல்வன் வெற்றி கண்டவர். அவருடைய போராட்ட வாழ்வு பல் பரிமாண பக்கங்களை உடையது.

பிரிகேடியர் தமிழ்ச்செல்வன் இந்தியா,இலங்கை இராணுவத்துடன் நேரடியாக பல சமர்களில் ஈடுபட்டு பலமுறை விழுப்புண் அடைந்தவர்.

தாயக மக்களோடு தொடங்கிய அவரது விடுதலைப் பயணம் உலகெங்கும் விரிந்தது. உலகெல்லாம் ஓடியோடி எங்களது நியாயங்களை எடுத்துரைத்த இராஜதந்திரி அவர். தன்னுடைய சிரிப்பாலே எல்லா மக்களையும் கவர்ந்து மக்களோடு நெருங்கியிருந்து இறுதி மூச்சுவரை போராடி வீழ்ந்தவர்.

எங்களுடைய அரசியற்துறைப் பொறுப்பாளரின் இழப்பு ஒட்டுமொத்த விடுதலையை விரும்பும் தமிழ் இனத்துக்கும் பேரிழப்பாகும். மக்கள் இராணுவ அடக்குமுறைகளுக்குள் இருந்து கொண்டு அமைதியாக அழுகின்றனர்.அந்த தேசத்தின் துயரில் நாங்களும் பங்கெடுக்கின்றோம். 'இலட்சிய வாழ்வை சாவுகள் அழிக்காது என உறுதிப்படத் தெரிவித்துக் கொள்கின்றோம்'.

## சமாதான முயற்சிகளுக்கு விழுந்த மற்றுமொரு தாக்கம்

### இ.தொ.கா.அனுதாபம்

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின் மறைவு சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கு தடங்கலாக அமையும் என்று கூறியுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும் புலிகளுக்கும் அதன் தலைமைக்கும் தமது அனுதாபத்தையும் தெரிவித்துள்ளது. இலங்கை அரசு பிரதிநிதிகளுடனும் சர்வதேச தலைவர்களுடனும் சுமுகமான உறவுகளை கொண்டிருந்த தமிழ்ச்செல்வனின் மரணம் சமாதான முயற்சிக்கு விழுந்த மற்றுமொரு தாக்கமாகும் என்றும் இ.தொ.கா.குறிப்பிட்டுள்ளது.

அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்வதில் முக்கிய பங்காற்றியவர் தமிழ்ச்செல்வன். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர், விடுதலைப் புலி உறுப்பினர்கள், அவ்வியக்கத்தின் தலைமைத்துவம் ஆகியோருக்கும் தமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்வதாகவும் இ.தொ.கா.தெரிவித்துள்ளது.

## எம்மை பேரதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது

### கொளத்தூர் தா.செ.மணி பெரியார் திராவிட கழகத் தலைவர்



தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் படுகொலை செய்யப்பட்ட செய்தி உலகத் தமிழர்கள் அனைவருக்கும் அதிர்ச்சி தந்துள்ளது.

1984இல் போராளியாக அறிமுகமாகி அதன் பின்னர் தமிழீழ தேசியத் தலைவருக்கு தனி உதவியாளராகவும் யாழ். மாவட்டத் தளபதியாகவும் பின்னர் தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளராகவும் அவரின் பல கட்ட வளர்ச்சியைப் பார்த்து மகிழ்ந்த எம்மை இந்தச் செய்தி பேரதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இலங்கை வான்படையின் கொடூரமான வான் தாக்குதலில் சு.ப.தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட ஐந்து போராளிகளை இழந்து நிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தமிழீழத் தமிழர்களுக்கும் எமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.

அழகிய புன்னகையுடனும் ஆழமான, தெளிவான, நிதானமான பேச்சுக்களுடனும் உலகத் தமிழரால் பார்த்துவரப்பட்ட அந்தப் பெருமகன் இன்று நம்மோடு இல்லை.

இலங்கை அரசின் இராணுவ,பொருளாதார இலக்குகளை மட்டும் தாக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகளாகக் காட்ட முயல்வோர் அமைதிப் பேச்சுவார்த்தைக்கு புலிகள் தரப்பில் தலைமை ஏற்றிருந்த அரசியல் துறைத் தலைவரையே குறிவைத்து படுகொலை செய்தமைக்கு என்ன சொல்லப் போகிறார்கள்?

இப்படிப்பட்ட வெறித்தனமான இலங்கை அரசுக்கு ஆயுதமும் பயிற்சியும் கொடுக்கும் இந்திய அரசும் இதைப் பார்த்துக் கொண்டும் வாய்மூடி மௌனியாக இருக்கும் தமிழக அரசும் தங்கள் நிலைப்பாடுகளை இந்த நிலையிலாவது மறுபரிசீலனை செய்திட வேண்டும்.

## ஈடு செய்ய முடியாத இழப்பு

### யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

இலங்கை விமானப்படையினரின் தாக்குதலில் உயிரிழந்த தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளரும், தமிழர் தரப்பு சமாதான பேச்சுக் குழுவின் தலைவர் பிரதிநிதியும் ஆகிய சு.ப.தமிழ்ச்செல்வனின் மறைவு ஈழத்தமிழ் மக்களுக்கு பெரும் ஈடுசெய்யப்பட முடியாததொரு இழப்பாகும். தமிழர் தரப்பினது நியாயபூர்வ அபிலாசைகளை சர்வதேச அரங்குக்கு சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலமாக தெளிவுறுத்திய தமிழ்ச்செல்வனின் மறைவு சமாதான நடவடிக்கைகளில் பாரிய பின்னடைவுகளையும் நீண்ட இடைவெளிகளையுமே தோற்றுவிக்கும்.

போர் நடைபெறும் சூழலில் இவ்வாறான இழப்புகள் ஏற்படுவது வழமையெனினும், உலக பிரதிநிதிகளினால் நன்கு கவனம் கொள்ளப்பட்ட தமிழ்ப் பிரதிநிதி தமிழ்ச்செல்வன் எனும் வகையில் இது சமாதானப் பாதையில் தேக்க நிலையை தோற்றுவிக்கும்.

அத்துடன் தமிழ்மக்களுக்கான தீர்வை சமாதானப் பேச்சுவார்த்தையினூடாக பெற்றுக்கொடுக்க நினைக்கும் மென்போக்கு கொண்ட சர்வதேச தலைவர்களுடைய செயற்பாட்டிலும் பின்னடைவுகளை ஏற்படுத்தலாம்.

இந்த வகையில் ஜீரணிக்க முடியாத இழப்புக்கு எமது வார்த்தைகளினூடு ஈடுகட்ட முடியாது அவரது பிரிவால் பாதிப்புற்றுள்ள ஒட்டு மொத்த உலக தமிழ்ச் சமூகத்தில் நாமும் ஒரு அங்கத்தினர் எனும் வகையில் கவலை தோய்ந்த மனதுடன் எமது அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இரவது இழப்பால் துயர்கொள்ளும் அவரது மனைவி பிள்ளைகளுக்கும் எமது ஆறுதல்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

## இலங்கை அரசின் படுபாதகச் செயலை அனைத்துலக நாடுகள் கண்டிக்கவேண்டும்

### ம.தி.மு.க.பொதுச்செயலாளர் வை.கோ.



விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு தலைவர் சு.ப. தமிழ்ச்செல்வன் கொல்லப்பட்டார் என்ற செய்தி கேட்டு அதிர்ச்சியில் உறைந்தது உள்ளம். தமிழ் ஈழ மக்களின் உரிமைக்காக, தாய் மண்ணின் விடுதலைக்காக தன் வாழ்வை அர்ப்பணித்துப் பணியாற்றி வந்த தமிழ்ச்செல்வன், ஆக்கிரமிப்பு இராணுவத்தோடு, ஈழத்தின் விடுதலைப் போரில் பல போர்க் களங்களில் மரணத்தை எதிர்கொண்டு போராடி உள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மெய்க்காப்பாளர்களுக்குள் ஒருவராக,1980களில் திகழ்ந்தவர். விடுதலைப் புலிகளின் சாவகச்சேரி படைப் பொறுப்பாளராகவும்,பின்னர் யாழ்ப்பாணப் படை பொறுப்பாளராகவும் திறமையாகப் பணியாற்றி,ஆனையிறவு வெற்றிப் போரில் மரண காயமுற்று மீண்டார். யாழ்.தேவியில் நடைபெற்ற யுத்த களக் காயங்களினால் கால் ஊனமுற்றார்.

1993 முதல் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு தலைவராகச் செயல்பட்டார். தமிழ் ஈழத்தின் தியாகமும், தீரமும், வீரமும் நிறைந்த விடுதலைப் போராட்டத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுக்கு தலைமை ஏற்று,நோர்வே அரசு முன்னின்று நடத்திய பேச்சுவார்த்தைகளில் தொடர்ந்து பங்கு ஏற்று வந்தார். இலங்கையிலும் அயல்நாடுகளிலும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளிலும் பங்கு ஏற்றார்.

உலக நாடுகளில் இருந்து வரும் பிரதிநிதிகள், ஐ.நா. மன்றத்தின் பிரதிநிதிகள்,இலங்கையில் தமிழ் பகுதிக்கு வரும் போதெல்லாம் அவர்களை புலிகளின் தரப்பில் சந்தித்து வந்தார். இயக்கத் தலைமையிடம் கொண்ட ஈடற்ற விசுவாசமும், பிரச்சினைகளை நுணுக்கமாக அலசி ஆராயும் மதிநுட்பமும், எதிரிகளை திணறடிப்பதோடு, கேட்பவர்களைத் தன் பக்கம் ஈர்க்கும் வாதத்திறமையும் பெற்றவர். தியாக வாழ்வை மேற் கொண்டவர் தமிழ்ச்செல்வன்.போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி,சமாதானப் பேச்சுவார்த் தையை சமாதிக்கு அனுப்பியது இலங்கை அரசு தான் என்பது தமிழ்ச்செல்வனைப் படுகொலை செய்ததன் மூலம் வெட்ட வெளிச்சமாகிவிட்டது.

தமிழ் குலத்தின் பிஞ்சுக் குழந்தைகளை, செஞ்சோலையில் குண்டு வீசிக்கொன்று ஒழித்த இலங்கை அரசு,தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை தேவாலயத்திலும் நடு வீதியிலும் சுட்டுக் கொன்ற இலங்கை அரசு, தமிழ்ச்செல்வன் இருந்த நிலவறைத் தளத்தின் மீது சக்தி வாய்ந்த இராட்சதக் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தி இப் படுகொலையைச் செய்துள்ளது.

இப்படி இனப்படுகொலை செய்யும் இலங்கை அரசுக்கு, பாகிஸ்தானும்,சீனாவும் ஆயுதம் வழங்கி வரும் சூழ்நிலையில், இந்திய அரசாங்கமும் ராடர்களையும்,சக்தி வாய்ந்த இராணுவத் தளபாடங்களையும்,ஆயுதங்களையும் வழங்கி யது தமிழ் இனத்திற்கு செய்த மன்னிக்க முடியாத துரோகம் ஆகும். இந்தத் துரோகத்தில் ஈடுபடும் இந்திய அரசுக்கு கடுமையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் இனத்தையே கருவறுக்க முனைந்து திட்டமிட்டு இனப்படுகொலை நடத்தி வரும் இலங்கை அரசு,தற்போது தமிழ்ச்செல்வனை கொன்ற படுபாதகச் செயலை உலக நாடுகள் கண்டித்திட முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் ஈழத்தின் தியாகப் புதல்வன் தமிழ்ச்செல்வன் மறைவினால் கண்ணீரில் தவிக்கும் தமிழ் ஈழ மக்களுக்கும், வீரச் சகோதரனைப் பறிகொடுத்துவிட்ட வேதனையில் துடிக்கும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கும்,ம.தி.மு.க. சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்ச்செல்வன் சிந்திய இரத்தத்திலிருந்து ஏராளமான இளைஞர்கள் தோன்றுவார்கள்

### பழ.நெடுமாறன்

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இலங்கை விமானக் குண்டு வீச்சுக்குப் பலியாகி உயிரிழந்த செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தேன். கடந்த 25 ஆண்டு காலத்திற்கும் மேலாக தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின் நம்பிக்கை யினைப் பெற்றவர். பல்வேறு காலங்களில் தலைமை தாங்கி போராடியவர்.

சந்திரிகா அரசு இருந்தபோது நடைபெற்ற பேச்சுவார்த்தைகளிலும் பின்னர் நோர்வேயின் முயற்சியால் நடைபெற்ற அனைத்துப் பேச்சுவார்த்தைகளிலும் புலிகளின் பிரதிநிதியாக கலந்துகொண்டவர். இளம் வயதில் சர்வதேச ராஜதந்திர அரசியலில் சிறந்து விளங்கியவர். புலிகளின் சார்பில் சமரச பேச்சுக்களுக்கு தலைமை தாங்கிய தளபதியை குறிவைத்து குண்டு வீசி படுகொலை செய்ததன் மூலம் இனி சமரசப் பேச்சுக்களுக்கு இலங்கை அரசு தயாராக இல்லை என்பதை வெளிப் படுத்திவிட்டது.

மாவீரர்கள் புதைக்கப்படுவதில்லை விதைக்கப்படுகிறார்கள் என்பதற்கு இணங்க மறைந்த தமிழ்ச்செல்வன் சிந்திய இரத்தத்திலிருந்து ஏராளமான இளைஞர்கள் தோன்றி விடுதலைப் போரை தொடர்ந்து நடத்துவார்கள் என்பதில் ஐயமில்லை. மறைந்த தமிழ்ச்செல்வன் அவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் தமிழகமெங்கும் கூட்டங்களை நடத்தும்படி அனைத்து தமிழ்த் தேசிய அமைப்புகளை வேண்டிக்கொள்கிறேன்.

# 17,767 பட்டதாரிகளுக்கு அடுத்த ஆண்டு மார்ச் இறுதிக்குள் வேலை வாய்ப்பு

## பிரதி நிதியமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

வேலையற்ற பட்டதாரிகள் உட்பட தருண அருண மூன்றாம் கட்ட பட்டதாரிகளுக்குமாக மொத்தம் 17,767 அரசதுறை வேலை வாய்ப்புக்கள் 2008ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதிக்குள் வழங்கப்படும் . எனவே வங்குரோத்தான அரசியல்வாதிகளின் இருப்புக்களாக பட்டதாரிகள் சோரம் போகக்கூடாதென பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

நிதியமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே பிரதி நிதியமைச்சர் சியம்பலாபிட்டிய இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

வேலையற்ற பட்டதாரிகளுக்கும் தருண அருண மூன்றாம் கட்ட பட்டதாரிகளுக்கும் அரசதுறையில் வேலைவாய்ப்புக்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைகளுக்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ளது. மற்றும் நேர்முகப்பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ளன. ஒரு சிலருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக அரச வங்கிகளில் தொழில் வாய்ப்புக்களை வழங்கியுள்ளோம். அதுமட்டுமல்லாது கிராமங்களில் 8000 பேருக்கு ஆசிரியர் தொழில்களை வழங்கி பயிற்சிக் காலத்தில் ரூபா 7500 சம்பளம் வழங்குவதற்கும் கடந்த வரவு -செலவுத் திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்பட்டது.

தருண அருண பட்டதாரிகளின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்க தயாராகவே இருக்கின்றேன். வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் நடந்தபோது நான் கொழும்பில் இருக்கவில்லை.அன்று இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் கவலையடைகின்றேன் : வேலைவாய்ப்புக்களை வழங்க மேற்கொள்ளப்படும் கிரமமான முறைகள் காரணமாக கால தாமதங்கள் ஏற்படுகின்றன. ஆனால் அடுத்த ஆண்டு மார்ச்சுக்குள் வேலை வாய்ப்புக்கள் அனைத்தும் வழங்கப்படும்.

எனவே வங்குரோத்தான அரசியல் வாதிகளின் தேவைக்காக பட்டதாரிகள் சோரம் போகக் கூடாதென்றும் பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

**பிரதிபொலிஸ்மா அதிபர்நிமால்மெதிவக**

கொழும்பிலுள்ள உயர் பாதுகாப்பு பிரிவுக்குள் நுழைவதற்காக விடுதலைப் புலிகள் பாரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இது போன்ற சூழ்நிலையில் ஆர்ப்பாட்டங்களை நடத்தி பலாத்காரமாக அப்பகுதிக்குள் நுழைய முயல்வது தேசிய பாதுகாப்புக்கு குந்தகமாகும். ஏனென்றால் ஆர்ப்பாட்டத்திற்குள் புலிகள் புகுந்து ஊடுருவும் நிலைமைகள் உருவாகலாம்.

எனவேதான் உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் நுழைய முனைந்தவர்களை கண்ணீர் புகைக்குண்டு மற்றும் தண்ணீரை பீச்சியடித்து தடுத்து நிறுத்தினோம் என்று பிரதி பொலிஸ்மா அதிபர் நிமால்மெதிவக தெரிவித்தார். (அ-5)

## விசாரணைகளை கொழும்பு நீதிமன்றங்களில் நடத்த அனுமதி வழங்குமாறு வேண்டுகோள்

(கொழும்பு)

புலிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் சிங்களவர்கள் தொடர்பான விசாரணைகளை கொழும்பில் உள்ள நீதிமன்றங்களில் நடத்த அனுமதி வழங்கவேண்டும் என பொலிஸார் சட்டமா அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

புலிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய சிங்களவர்கள் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் கைதுசெய்யப்பட்ட நிலையில் அவர்கள் கைது செய்யப்பட்ட பொலிஸ் பிரிவில் உள்ள நீதி மன்றங்களில் ஆஜர்படுத்துவது கடினமானதும் பாதுகாப்பு அச்சுறுத்தலான விடயமாக இருக்கின்றமையினால் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

## இலங்கையிலிருந்து 215 வெளிநாட்டவர் இந்த வருடம் நாடு கடத்தப்பட்டனர்

(கொழும்பு)

இலங்கையில் அனுமதிக்கப்பட்ட காலத்தைவிட மேலதிகமாக தங்கியிருந்த 215 பேர் இவ் வருடத்தில் தமது சொந்த நாடுகளுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இவ்வாறு நாடு கடத்தப்படவுள்ள மேலும் சில வெளிநாட்டவர் தலாவத்துகொட தடுப்பு முகாமில் விசாரணை செய்யப்பட்டுவருவதாக, குடிவரவு-குடியகல்வு ஆணையாளர் பி.பி.அயக்கோன் தெரிவித்தார்.

சுற்றுலாப் பயணிகளுக்குரிய விசாவில் நாட்டிற்குள் புகுந்த சிலர் தொழில் புரிந்து வருவதாகவும் வேறு சிலர் குற்றச்செயல்களில் ஈடுபட்டிருப்பதாகவும் அயக்கோன் கூறினார்.

2000 முதல் 2500 வரையிலான கடவுச்சீட்டுக்களை நாளாந்தம் விநியோகித்து வரும் குடிவரவு -குடியகல்வு திணைக்களம், கடவுச்சீட்டு , விசா , அதற்குரிய முத்திரை, குடியுரிமை மற்றும் தண்டப்பணம் என்பவற்றால் மட்டும் 12 பில்லியன் ரூபாவை சம்பாதித்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

## உளவு விமானங்கள் மூலம் தகவல் பெற்று குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது

### இராணுவத்தின் சிரேஷ்ட உறுப்பினர் தெரிவிப்பு

கிளிநொச்சி வான்பரப்பில் நேற்றுமுன்தினம் அதிகாலை 4 மணிமுதல் விமானப் படைக்குச் சொந்தமான உளவு விமானங்கள் உளவு பார்த்த பின்னரே குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது என இராணுவத்தின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

புலிகளின் சர்வதேச தொடர்பாடல் நிலையமும் விமானத் தாக்குதல் மூலம் அழிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

விமானப் படையினர் நடத்திய முதலாவது குண்டு வீச்சுத் தாக்குதலுக்கு பொதுமக்களே இலக்கானதாகவும் பின்னர் இரண்டாவது தடவையாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலிலேயே விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கொல்லப் பட்டதாகவும் கிளிநொச்சித் தகவல்கள் தெரிவித்தன.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் அலுவலகத்திற்கு அருகிலிருக்கும் அரசியல் துறைப் பொறுப்பாளரின் பிரத்தியேக அறையின் மீது விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாகவும் இதனாலேயே சு.ப.தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட ஆறு பேர் கொல்லப் பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றில் இராணுவத் தினரின் தாக்குதலில் கொல்லப்பட்டமுதலாவது சிரேஷ்ட உறுப்பினர் சு.ப தமிழ்ச்செல்வன் என்றும் புலிகள் இயக்கத்தின் அதியுயர்பதவி நிலையாக பிரிகேடியர் தகுதி அவருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது.

தமிழ்ச்செல்வனுக்கு 8 வயது மகளும் 4 வயது மகனும் இருப்பதாக விடுதலைப் புலிகள் தரப்பு தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன்உட்பட ஆறு பேரும் விமானக் குண்டு வீச்சின் நேரடித்தாக்குதலால் கொல்லப்படவில்லை என்றும் காற்றில் ஏற்படுத்திய அழுத்த மாற்றத்தின் காரணமாகவே உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

## சமஷ்டி பற்றிய சர்வதேச மாநாடு இந்தியாவில் நாளை ஆரம்பம்

(இந்தியா)

அடுத்த வாரம் இந்தியாவில் நடைபெறவுள்ள சமஷ்டி பற்றிய சர்வதேச மாநாட்டில் மாநில அரசாங்கத் தலைவர்கள் அரசியல் நிபுணர்கள் செயற்பாட்டாளர்கள் உட்பட ஆயிரம் பேரளவில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

நவம்பர் 5 ஆம் திகதி தொடக்கம்7 ஆம் திகதி வரை கனடாவைத் தளமாகக் கொண்டியங்கும் கூட்டமைப்பு மன்றத்தின் ஆதரவில் நடைபெறவுள்ள இம் மாநாடு இலங்கையைப் போலக் குழப்ப நிலையிலுள்ள நாடுகளுக்கு கருத்துகளை பரிமாறிக்கொள்வதற்கான ஒரு களமாக அமையும்என இம் மாநாட்டு அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

1983 ஆம்ஆண்டிலிருந்து முடிவுறாத தமிழர் தாயகக் கோரிக்கைக்குப் போராட்டம் நடைபெறும். இலங்கை மஹிந்த சமரசிங்க, ரவூப் ஹக்கீம் ஆகிய இரு அமைச்சர்களை இம் மாநாட்டுக்கு அனுப்பவுள்ளது. இவர்களைத் தவிர கே. விக்னேஸ்வரன் , கஜேந்திர குமார் பொன்னம்பலம் ஆகிய இரு அரசியல் வாதிகளும் இம் மாநாட்டில் கலந்துகொள்கிறார்கள். அதிகாரப்பரவலாக்கள் சம்பந்தமாக தேசிய இணக்கப்பாட்டை கொண்டுவருவதற்காக போராடும் அமைச்சர் திஸ்ஸ விதாரணவும் இம் மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளார்.

சமஷ்டி ஆட்சி முறை அமைப்பில் வெற்றியை நிரூபித்துள்ள இந்திய நாட்டில் பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் தலைவர் சோனிய காந்தி, எதிர்க் கட்சித் தலைவர் எல். கே. அத்வானி , உள்துறை அமைச்சர் சிவராஜ் படேல்ஆகியோரும் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

பொஸ்னிய, கனடா, ஜேர்மனி, மெக்சிக்கோ, ஒஸ்ரியா, ஈராக், சூடான், மலேசியா, தென்ஆபிரிக்கா , ஆர்ஜன்ரினா, பிரேசில், பொலிவியா, லிபியா, ஐக்கிய அரபு நாடுகளின் உயர் மட்டக்குழுவும்கலந்து கொள்கின்றன. (அ-து)

## உர விநியோகம்

காரைநகர் கமநல சேவைகள் நிலையத்தினால் தற்போது வழங்கப்பட்டுவரும் இரண்டாம் கட்ட மானிய உர விநியோகம் (ரி.டி.எம்) எதிர்வரும் 7ஆம் திகதி வரை மட்டுமே நடைபெறும் எனவும் இதுவரை மேற்படி உரத்தினை பெற்றுக்கொள்ளாதவர்கள் குறித்த திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு காரைநகர் கமநல சேவைகள் நிலையத்தினர் கேட்டுள்ளனர். (அ-246)

## அரசாங்கத்தின் செயல் யுத்த சூழ்நிலையை இன்னும் உக்கிரமடையச் செய்து விட்டது

### இலங்கை தேசிய சமாதானப்பேரவை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கொலை செய்யப்பட்டமையானது தற்போதுள்ள யுத்த சூழ்நிலையை இன்னும் உக்கிரமடையச் செய்யும் நிகழ்வாக அமைந்து விட்டது என இலங்கை தேசிய சமாதானப் பேரவை தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் தமது சமாதான நடவடிக்கைகளில் இருந்து விலகிக் கொள்ளக்கூடிய சாத்தியக்கூறுகள் இதன் மூலம் அதிகரித்துள்ளதாகவும் அப்பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை விமானப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட வான் வழித் தாக்குதலில் சு.ப.தமிழ்ச்செல்வன் கொல்லப்பட்டதையடுத்து இலங்கையின் சமாதான நிலைமைகளில் சிக்கல் நிலை தோன்றக்கூடுமா? எனக் கேட்டபோதே பேரவையின் சார்பில் கருத்து தெரிவித்த பணிப்பாளர் ஜெகான் பெரேரா இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனை இலங்கை அரசாங்கம் கொன்றுவிட்டது. எனவே இதன் பின் விளைவுகள் மிக மோசமானதாகவே அமையும் எனத்தோன்றுகிறது.

தற்போதுள்ள யுத்த சூழ்நிலைகள் இன்னும் உக்கிரமடையும் நிலையை அரசாங்கம் தோற்றுவித்துள்ளது.

இதன் பின்னரான விளைவுகள் தனி மனித கொலை, இராணுவத்தினர் மீதான தாக்குதல் அல்லது அரச சொத்துக்களுக்கான சேதம் என எப்படி வேண்டுமானாலும் அமையலாம்.

இதனால் இலங்கையின் சமா தானப் பயணத்தை இலங்கை அரசாங்கம் தடை செய்து விட்டமை நன்றாக புலப்படுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளையோ அல்லது அவர்களது அரசியல் தலைவர்களையோ கொன்று குவிப்பதன் மூலம் அரசாங்கம் சமாதானத்தை கொண்டுவர நினைக்கின்றது. ஆனால் இது முற்றிலும் தவறான வழிமுறையாகும்.

அரசாங்கத்தின் இந்த காரியத்தினால் இலங்கையில் சமாதானம் என்ற வார்த்தை சங்கடமான நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டது. (அ-5)

## ஐ.தே.க வின் புலிகளுடன் பேசுங்கள் என்ற கருத்துக்கு ஜே.வி.பி கண்டனம்

(கொழும்பு)

புலிகளுடன் பகைமைத்தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றை செய்து சமாதான பேச்சை ஆரம்பிக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கோரிக்கைக்கு அரசாங்கம் கண்டித்து பதில் வழங்காமல் இருக்கின்றமையானது மேற்குலக சதித்திட்டத்தை ஏற்றுக் கொண்டமைக்கு ஒப்பானது என ஜே.வி.பி. குற்றம் சாட்டியுள்ளது.

ஐ.தே.கவின் கண்டி மாவட்ட எம். பி.லக்ஸ்மன் கிரியெல்ல மேற்படி ஒப்பந்தம் ஒன்றை செய்யவேண்டுமென கூறியதற்கு அர சாங்கம் மௌனமாக இருக்கின்றமையை கண்டித்து ஜே.வி.பி.வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

புலிகளுடன் பகைமை தவிர்ப்பு உடன்படிக்கையை மேற்கொண்டு அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டுமென்ற லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி.யின் கருத்தை கடுமையாக கண்டிக்கின்றோம்.

பிரிவினைவாத புலிகளினதும் அவர்களது எஜமானர்களான சர்வதேச சக்திகளினதும் கருத்தே இவ்வாறு வெளிப்பட்டுள்ளது. அதன் அடுத்த பிரதிபலிப்புத்தான் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் வைக்கப்பட வேண்டுமென்பது.

ஐ.தே.கட்சி இன்று மேற்குலக அதிகாரர்களினதும் புலிகளினதும் பேச்சாளர்களாக மாறியிருப்பது வெட்கப்பட வேண்டிய விடயமாகும். இதேநேரம் அரசாங்கம் இக்கருத்தை எதிர்க்கவேண்டும்.

பயங்கரவாதத்தை தோல்வியடையச் செய்து தமிழ் மக்களுக்கு ஜனநாயகத்தை வழங்கவேண்டுமெனத் தெரிவித்திருக்க வேண்டும் .அவ்வாறு தெரிவிப்பதே அர்ப்பணிப்புடன் செயற்படும் எமது படையினரை கௌரவிப்பதாக அமையும். இல்லாவிட்டால் அது படையினரை காட்டிக்கொடுப்பதாக அமையும்.

ஆனால் அரசாங்கம் மௌனம் காக்கின்றது. இது ஐ.தே.கட்சியின் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதா என்ற நிலைப்பாட்டை தோற்றுவிக்கின்றது.

எனவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் தமது நிலைப் பாட்டை பகிரங்கமாக வெளியிட வேண்டுமென்றும் ஜே.வி.பி.யின் அரசியல் பீடம் தெரிவித்துள்ளது.(அ-5)

# குரு பெயர்ச்சி

## கடகம்



(புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம் முடிய பாதங்கள் வரை

**16.11.2007 முதல் 30.11.2008 வரை**

(பெயரின் முதல் எழுத்துக்கள் :ஹி, ஹீ ஹே, ட ,டி, டே, டோ உள்ளவர்களுக்கும்)

**ஆனந்த வாழ்வை அமைத்துக் கொடுக்கும் ஆறாமிடத்துக் குரு!**

எதற்கும் கலங்காத மனமும் எதிர்ப்பைக் கண்டு அஞ்சாத குணமும் கொண்ட கடக ராசி நேயர்களே!

மனதில் பட்டதை மறைக்காமல் சொல் லும் உங்களுக்கு சந்தோஷமான வாழ்க்கையை சந்திக்க வைக்க வந்துவிட்டது குருப்பெயர்ச்சி. இனி சிந்திக்காது செய்த காரியங்களில் கூட சிறப்பான பலன்களைக் காணப்போகிறீர்கள் அந்த அளவிற்கு குருவின் பார்வை உங்களுக்கு ஆச்சரியப்படத்தக்க பலன்களை வழங்கப்போகின்றது.

இதுவரை 5ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான் நவம்பர் 16ஆம் திகதி முதல் 6ஆம் இடத்தில் சஞ்சரித்து ஏராளமான மாற்றங்களை உங்களுக்கு வழங்கப்போகிறார். தாராளமாகச் செலவிட தனவரவு வந்துகொண்டே இருக்கும். பாராளும் யோகமும் வந்து சேரலாம். பஞ்சாயத்தில் தலைவராகவும் வீற்றிருக்கலாம். ஆறாமிடத்து ஆதிக்கத்தால் அதிர்ஷ்டத்தை அதிகரிக்கவும் ஆரோக்கியம் சீராகவும் கூரான மதிவளத்தால் கும்பிடும் தெய்வத்தை தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும் அப்பொழுது தான் யாராலும் அசைக்க முடியாத அளவு முன்னேற்றம் வந்து சேரும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

**நாட்டுக்கு நன்மை செய்யும் நல்லவர்கள் நீங்கள்**

வீட்டுக்கு நன்மை செய்ய விரும்புபவர்கள் பலர் உண்டு. ஆனால் உங்களைப் பொறுத்தவரை நாட்டுக்கு நன்மை செய்ய விரும்புபவர்களாக இருப்பீர்கள். உதவிக்கரம் நீட்ட நீங்கள் முன்வருவதால் தான் பதவி வாய்ப்புக்கள் தானாகவே வந்து சேரப் போகின்றது. மற்றவர்களுக்கு வராத யோசனைகள் எல்லாம் உங்களுக்கு வந்து சேரும்.

எப்படியெல்லாம் எதிரிகளை உதிரியாக்கலாம் என்று சிந்தனை செல்லும். உங்கள் யோசனைகளை கேட்டுநடந்தவர்கள் யோகமான வாழ்க்கையை அமைத்துக் கொள்வார்கள். பேசும் கலையை பெரிதும் கற்று வைத்திருப்பவர்களின் பட்டியலில் முதலிடம் பிடிப்பவர்கள் நீங்கள் தான்.

கடிவாளம் இல்லாத குதிரை போல துள்ளித் திரியும் உங்களுக்கு பிடிவாதக்குணம் மட்டும் இல்லாவிட்டால் பிறரை அனுசரித்து செல்கின்ற ஆற்றலையும் வரவழைத்துக் கொண்டால் நொடிப் பொழுதில் உங்களுக்கு முன் னேற்றம் வந்து சேரும். ஆன்மீகம் முதல் அரசியல் வரை அத்துப்படியாக இருந்தாலும் உங்களுக்கு என்று பிரச்சினைகள் வரும் பொழுது உள்ளூர ஒரு பயம் வந்து சேரும்.

உங்கள் ராசிநாதன் சந்திரன் மனது காரகன் என்று வர்ணிக்கப்படுகிறார். எனவே மன அமைதி கிடைக்க வேண்டுமோனால் மண வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்கும் பொழு எட்டுப் பொருத்தங்கள் அல்லது முக்கியப் பொருத்தம் ஐந்தாவது இருக்க வேண்டும். உங்கள் ராசிநாதனின் சார பலத்திற்கேற்ப படிப்பு தொழில் போன்வற்றை தேர்ந்தெடுத்துக்கொள்வதோடு அதற்கு நட்புக் கிரகத்திற்குரிய எண்ணின் ஆதிக்கத்தில் உங்கள் பெயரையும் அமைத்துக்கொண்பால் எல்லா நாட்களும் இனிய நாட்களாக மாறும்.

**குருவின் பார்வையால் ஏற்படும் குதூகலம்**

இதுவரை ஐந்தாமிடத்தில் சஞ்சரித்து வந்து குருபகவான் இப்பொழுது ஆறாமிடத்தில் சஞ்சரித்து அதன் புனிதமான பார்வையை குடும்ப ஸ்தானத்திலும் தொழில் ஸ்தானத்திலும் விரய ஸ்தானத்திலும் பதிக்கிறார். எனவே குடும்பத்தில் விரயங்கள் ஏற்படுமோ? என்று நீங்கள் நினைக்க வேண்டாம். குடும்ப ஸ்தானத்தையும் விரயஸ்தானத் தையும் ஒரே அமைப்பில் குரு பார்ப்பதால் மங் கள நிகழ்ச்சிகளுக்கான விரயம் தார்ன் என் பதை நினைவில் கொள்ளுங்கள் பிள்ளைக ளுக்கு திருமணம் நடைபெறும். சிறு குழந்தைகளாக இருந்தால் படிப்புச் செலவில் விரயமாகலாம். எல்லா குழந்தைகளுக்கும் கல்யாணம் முடிந்து விட்டது. என்றால் நீங் கள் இல்லம் கட்டி குடியேறும் வாய்ப்பு உரு வாகலாம். இல்லையேல் கட்டிய வீட்டை பழுதுபார்க்கும் சூழ்நிலை அமையலாம். பாகப் பிரிவினைகள் சுமூகமாகும். என்ன இருந்தாலும் 6ஆம் இடம் எதிர்ப்பு, வியாதி, கடன் என்று வர்ணிக்கப்படும் இடமாகும். அந்த இடத்தை சொந்த இடமாகக்கொண்ட குரு அங்கேயே ஓராண்டுகாலமாக அரசாட்சி செய்யப்போவதால் எதிர்ப்புக்களையும் நீங்கள் முறிடிக்க வேண்டும் வியாதிகளையும் நீங்கள் விலக்கிக்கொள்ள வேண்டும் கடன் சுமையையும் நீங்கள் குறைத்துக்கொள்ளவேண்டும். இவற்றிக்கெல்லாம் தீர்வுகான உங்கள் சுய ஜாதகம் வழிகாட்டும்.

**ஆலய வழிபாடு ஆனந்தம் வழங்கும்**

ஜாதகத்தில் குரு இருக்கும் இடத்தையும் அது பார்க்கும் கிரகத்தின் பலத்தையும் பாத சாரத்தையும் அறிந்து அதற்கேற்ப ஸ்தலங்களைத் தேர்ந்தெடுத்து முறைப்படி யோக பலம் பெற்ற நாளில் சென்று வழிபட்டு வந்தால் யோகங்கள் வந்து சேரும். வருமானம் பெருகி வளர்ச்சியும் கூடும். பெருமைகள் வந்து பிர பலஸ்தர்களின் பட்டியலிலும் இடம் பிடிப்பீர்கள்.

# உங்களுக்கு எப்படி?

குரு உங்கள் ராசிக்கு 6,9 க்கு அதிபதி எனவே உடல் நிலை இடையூறுகள், கடன் சுமை வழக்குகள், தொழில் மாற்றம் கருத்து வேறுபாடுகள் தந்தை, புண்ணியம் கடவுள் வழிபாடு, வாகன யோகம், பிரயாணம், சொத்துக்களால் லாபம், ஐஸ்வர்யம், விலங்கு வளர்ப்பு, தர்ம சிந்தனை, சகோதர உதவி ஆகியவற்றை தனது ஆதிக்கத்தில் வைத்துக் கொண்டிருக்கும் குருவின் பார்வை பலத்த தால் எண்ணற்ற மாற்றங்களை நீங்கள் காணப் போகிறீர்கள்.

**குடும்பத்தில் உள்ள குழப்பங்கள் அகலும்**

குடும்ப ஸ்தானத்தை குரு பார்ப்பதால் குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் அகலும் சகோதர ஒற்றுமை பலப்படும். உங்கள் திட்டங்களுக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர். சுப விரயங்கள் அதிகரிக்கும். சொல்லை செயலாக்கிக் காட்டுவீர்கள். வீட்டுக்குத் தேவையான விலை உயர்ந்த் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கூட்டுக் குடும்பத்தில் உ ங்கள் சொல் கேட்டு நடக்க அனைவரும் முன்வருவர். உறவினர் பகை அகலும் கல்யாணக் கனவு நனவாகும்.

**தொழில் வளர்ச்சி மேலோங்கும் நேரம்**

குருவின் பார்வை தொழில் ஸ்தானத்தில் பதிவதால் இதுவரை தொழிலில் இருந்த இடையூறுகள் அகலும், போட்டிக் கடை வைத்தோர் வேறிடத்திற்கு சென்று விடுவர் . பொழுதெல்லாம் சம்பாதிக்கும் எண்ணம் மேலோங்கும். ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து அனைத்து காரியங்களையும் முடித்துக்கொடுப்பர். ஏற்றுக் கொண்ட தொழிலோடு இணையாக வேறு தொழிலும் வந்து சேரும் . உத்தியோகஸ்தர்கள் வி. ஆர். எஸ் வாங்கிக் கொண்டு விரும்பிய தொழிலைச் செய்யலாம். அத்தனையும் சிறப்பாக அமைய அருகிலிருக்கும் குருவுக்கு அபிஷேகம் செய்து மகிழுங்கள்.

**பயணங்களால் பலன் வரும் நேரம்**

12 ஆம் இடத்தில் குருவின் பார்வை பதிவதால் பயணங்கள் அதிகரிக்கும் . பொது வாழ்வில் புகழ் கூடும். பதவி வாய்ப்புகள் வந்து சேரும். அன்னிய தேச அழைப்புகளை எண்ணியளவுடன் ஏற்றுக்கொள்ளாமல் ஜாதகத்தில் தெசாபுத்தி பலம் பெற்றால், ஏற்றுக் கொள்ளுங்கள். விலகிய கூட்டாளிகள் விரும்பி வந்து சேருவர். வீண் வழக்குகள் ஓயும். திருப்பணி செய்யும் வாய்ப்புகள் கை கூடிவரும்.

**மகர குருவால் ஏற்படும் மாற்றம் 23.4. 2008 முதல் 4.6.2008 வரை**

தனுசு ராசியில் சஞ்சரித்து வந்த குரு பகவான் ஏப்ரல் மாதம் மகர ராசியில் சஞ்சரிக்கப்போகிறார். அப்பொழுது அதன் பார்வை உங்கள் ராசியில்பதியப் போகிறது. எனவே அக்காலம் ஒரு பொற்காலமாகும். தொட்டதெல்லாம் வெற்றி பெறும். தொழில் வளர்ச்சி மேலோங்கும். தொகை வந்து கொண்டே இருக்கும். தொடர்கதையாக வந்த கடன் சுமை குறையும். அதன் பார்வை 3, 11 ஆகிய இடங்களில் பதிவதால் சகோதரத்தாலும் சகாயங்கள் கிடைக்கும். வாகன யோகம் முதல் வசதிகள் அனைத்தும் காண மலை வலம்வந் | மகத் தான நிலவை வழிபடுவது நல்லது.

**வளர்ச்சியைக் கூட்டும் வார வழிபாடு.**

திங்கட்கிழமை தோறும் தெற்கு நோக்கிய அம்பிகையை வழிபட்டு வாருங்கள் . மங்கல வாழ்க்கை அமையும்.

**செல்வவளம் தரும் சிறப்பு வழிபாடு**

தனுசு ராசியில் தனது சொந்த வீட்டில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை பலம் உங்க ளுக்கு பக்க பலமாக இருக்க வேந்தன்பட்டி நெய் நந்தீஸ்வரர் வீற்றிருக்கும் ஆலயம்சென்று நந்தீஸ்வர்ரை வழிபடுவதோடு நன்மைகள் வழங்கும் தெட்சிணாமூத்தியையும் அங்கு வழிபட்டுவாருங்கள் உண்மையிலேயே உங்கள் வாழ்க்கையில் ஒளிமயான எதிர்காலம் அமையும்.

**முன்னோர் சொத்துக்களில் முறையான இலாபம் கிடைக்கும் நேரம்**

குரு உங்கள் ராசிக்கு 6,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவார். அதன் பார்வை உங்கள் ராசிக்கு 2,10,12 ஆகிய இடங்களில் பதிவதால் அந்த இடங்கள் எல்லாம் புனிதமடைகின்றன. எனவே கொள்கைப் பிடிப்போடு செயல்பட்டு நீங்கள் கொடுத்த வாக்கை காப்பாற்ற இந்தக் குருப்பெயர்ச்சி உங்களுக்கு வழிகாட்டப்போகிறது.

தேவ குரு ஆறில் வந்தால்
தேவைகள் பூர்த்தியாகும்!
ஆவல்கள் தீர வேண்டின்
அனுசரிப்பு தேவையாகும்!
கோபத்தை விலக்கி நின்றால்
குடும்பத்தில் அமைதி கூடும்!
தீபத்தில் குருவைக் கண்டு
தரிசித்தால் நன்மை சேரும்!
என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் தேவ குரு ஆறாமிடத்தில் சஞ்சரிக்கும் பொழுது அருகிலிருப்பவர்களை அனுசரித்து சென்றாலே ஆனந்த வாழ்க்கையைக் காண இயலும். அன்றாட வாழ்க்கை நன்றாக அமைய ஆலயம் சென்று குருவை வழிபட்டால் அனைத்து காரியத்திலும் வெற்றி கிடைக்கும். குரு உங்கள் வாழ்வை வசந்தமாக்க வழிபாட்டிலில் ஆர்வம் காட்டுங்கள் அப்பொழுது தான் இடமாற்றம் முன்னோர் சொத்துக்களில் இலாபம், ஊர்மாற்றம், இலாகா மாற்றம் போன்றவைகள் கூட நீங்கள் எதிர்பார்த்தபடி அமையும்.

**அக்கறை செலுத்த வேண்டி வக்ரகாலம் (5.4.2008 முதல் 20.09.2008 வரை)**

6,9 க்கு அதிபதியான குரு வக்ரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல 9-க்கு அதிபதி வக்ரம் பெறுவதால் தந்தையுடன் மோதல், தனயனுடன் கருத்து வேறுபாடு, சீரில்லாத சிந்தனை நிலை, சந்தான பாக்யத்தால் தொல்கள் போன்ற அனைத்தும் நேரிடலாம். எந்த விதத்தில் தொல்லைகள் வந்தாலும் அதை சந்திக்காமலிருக்க குரு வழிபாட்டை இக் காலத்தில் மேற்கொள்வது நல்லது. வியாழன் விரதங்களும் திசை மாறிய குருவின் தரிசனமும், உங்களுக்கு தித்திக்கும் வாழ்க்கையை அமைத்துக்கொடுக்கும்

**கடக ராசிப்பெண்களுக்கு கடந்த காலத்தை விட சிறப்பாக இருக்கும்**

இந்தக் குருப்பெயர்ச்சியால் கடகராசிப் பெண்களுக்கு கடந்த காலத்தை விட சிறப்பான நிலை உருவாகும். இழந்தவைகளை மீட்டெடுக்க செய்த முயற்சி வெற்றி பெறும். குழந்தைகள் முதல் குடும்பப்பெரியவர்கள் வரை உங்களை மதிக்கும் சூழ்நிலை உருவாகும். பழைய நகைகளைக்கொடுத்துவிட்டு புதிய நகைகளை வாங்கி மகிழ்வீர்கள். தாய்வழி தனலாபம் வந்துசேரும். முட்டுக்கட்டை போட்ட மூத்த சகோதாரர் ஒத்துவருவார். எதிர்த்துப் பேசிய இளைய சகோரதர் இணைந்து செயற்படுவார். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பதவி கிடைக்கும். வக்ரக காலத்தில் வாகனங்களை மாற்றிக்கொள்வது நல்லது. குருவின் பாதசாரம் அறிந்து வழிபட்டால் கும்பிட்டவுடன் நம்பிக்கைகள் அனைத்தும் நடைபெறும்.

## விழிப்பூட்டல் கருத்தரங்கு

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட தரம் 1 A B தரம் 1C பாடசாலை அதிபர்களுக்கும் பண்பு சார் விருத்தியும் உள்ளக மேற்பார்வைக்கு பொறுப்பான ஆசிரியர்களுக்கும் நிகழ்ச்சித் திட்டம் 2008க்கு தயாரித்தல் தொடர்பான விழிப்பூட்டல் கருத்தரங்கு வடமாகாண கல்வித் திணைக்கள வளவாளர்களால் நடாத்தப்படும்.

இச்செயலமர்வு இம்மாதம் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை யா/புலோலி மெ. மி.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது என தென் மாகாண கல்விப்பணிப்பாளர் வி.இராசையா அறிவித்துள்ளார். சகல அதிபர்களும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (அ)

## சிற்ப சித்திர பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலய சித்திர பரிசளிப்பு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் வலிகாம கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பணிப்பாளர் வி. இராசையா கலந்துகொள்ளவுள்ளார். (4)

## நூலகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேச சபை சரசாலை பொது நூலகம் நடாத்தும் வாசிப்பு மாதம் 2007ஐ முன்னிட்டு நூலகக் கண்காட்சி சரசாலை கனகம் புளியடிச் சந்தியில் உள்ள பொது நூலக மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை மு.ப.9 மணி முதல் மாலை 5மணிவரை நடைபெறும்.

நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் கு.ந.பாலச்சந்திரன் பிரமத விருந்தினராகவும் மட்டுவில் ஸ்கந்தவரோதயா மகாவித்தியாலய அதிபர் மு.பாலசுப்பிரமணியம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (அ-6)

## தொண்டர் ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் இடம்பெறும்.

தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர்முகத் தேர்வு விரைவில் நடைபெறவுள்ளமையால் அதற்கான பெயர்ப்பட்டியல் தொண்டர் ஆசிரியர் சங்கத்துக்கு கிடைத்துள்ளதாகவும் அப் பட்டியல் சரிபார்க்கப்பட்டு மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளரிடம் ஒப்படைக்கவேண்டியுள்ளதாலும் .

இக் கலந்துரையாடலில் சகல தொண்டர் ஆசிரியர்களும் தவறாது கலந்து தமது பெயர் பட்டியலில் உள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும், தவறும் பட்சத்தில் சங்கம் மேற்கொண்டு எதுவித நடவடிக்கையும் எடுக்க முடியாதிருக்கும் என்றும் சங்கத்தின் தலைவர் அறிவித்துள்ளார். (அ)

## கிரிக்கெற் போட்டியும் பரிசளிப்பு விழாவும்

(காரைநகர்)

தீபாவளி தினத்தை முன்னிட்டு கோவளம் விளையாட்டு க் கழகம் நடாத்தும் மென்பந்து கிரிக்கெற் சுற்றுப்போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று மாலை 2 மணிக்கு கோவளம் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

விளையாட்டுக்கழக தலைவர் த. சூரியகுமாரின் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக காரைநகர் உதவி அரச அதிபர் ஆர். ரி ஜெயசீலனும் , சிறப்பு விருந்தினர்களாக உடுவில் உதவி பிரதேச செயலர் அ. சோதிநாதன், யாழ். மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் சி. துரைசிங்கம், காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவு விளையாட்டு உத்தியோகத்தர் க. சுதாகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-246)

## அம்மா பகவான் வழிபாடு

ஸ்ரீபகவதி அம்மா சமேதரரின் பாத பூஜையும், பஜனை வழிபாடும் காரைநகர் புதுவீதியில் இன்று காலை 8மணி முதல் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் அம்மா பகவான் அடியார்கள் அனைவரையும் கலந்துகொண்டு இஷ்ட சித்திகளை பெற்றுய்யும் வண்ணம் கேட்கப்பட்டுள்ளது. (அ-246)

# சமாதான முன்னெடுப்பாளரை அரசு படுகொலை செய்துள்ளது

## பிரான்ஸ் தமிழர் உரிமை மையம் கண்டனம்

இலங்கைத் தீவில் சமாதான முன்னெடுப்பாளராக செயற்பட்ட தமிழீழ இராஜதந்திரி பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனை இலங்கை அரசு படுகொலை செய்துள்ளது என்று பிரான்ஸ் தமிழர் மனித உரிமை மையம் கண்டனம் தெரிவித்துள்ளது.

பிரான்ஸ் தமிழர் மனித உரிமை மையத்தின் செயலாளர் வி.கிருபாகரன் வெளியிட்டுள்ள அறிக்கை; தமிழீழத்தின் இராஜதந்திரியும், அரசியல்துறைப் பொறுப்பாளரும், சமாதான முன்னெடுப்பாளருமான பிரிகேடியர் சு.ப.தமிழ்செல்வன் மற்றும் அவருடைய சகாக்கள் ஐவரும் நவம்பர் 2ஆம் திகதி கிளிநொச்சியில் விமானப்படையால் படுகொலை செய்யப்பட்டதை அறிந்து நாம் மிக அதிர்ச்சியும் வேதனையும் கவலையும் அடைகின்றோம். மிக நீண்டகாலமாக தமிழீழ மக்களுக்கு ஒரு சுபீட்சமான வாழ்வையும் நிரந்தரமான அரசியல் தீர்வையும் இலங்கைத் தீவில் ஏற்படுத்திட பல அரசுகளுடன் அரசியல் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தமிழ்ச்செல்வன் ஈடுபட்டிருந்தமை நாம் யாவரும் அறிந்ததே. அண்மைக்காலங்களில் தாய்லாந்து, நோர்வே, ஜேர்மனி, ஜப்பான் போன்ற நாடுகளில் நடைபெற்ற அரசியல் பேச்சுவார்த்தையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் முதன்மைப் பேச்சாளராக கலந்துகொண்டு பல சகாப்த காலமாக அரசியல் உரிமைகளற்று கொடூர யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு வாழ் மக்களின் உண்மை நிலைகளை பேச்சுவார்த்தை மேசைகளில் எடுத்துரைத்து வந்தார். தமிழீழ மக்களை பேச்சுவார்த்தை என்ற பெயரில் மீண்டும் ஏமாற்றத் திட்டமிட்ட வேளையில் தமிழீழ மக்களுக்கான ஓர் இடைக்காலத் தீர்வை சரியான முறையில் தமிழ் வல்லுநர்கள் கொண்டு உருவாக்குவதற்கான முக்கிய ஒருங்கிணைப்பாளராகவும் விளங்கினார்.

தமிழ் மக்களினால் உருவாக்கப்பட்ட இந்த இடைக்காலத் தீர்வை, 2003 ஒக்ரோபர் 30 ஆம் திகதி நோர்வே அரசு மூலமாக இலங்கை அரசிடம் கையளித்தார். அந்த இடைக்காலத் தீர்வை சர்வதேச சமுதாயம் நன்கு வரவேற்றிருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள், நவம்பர் 1ஆம் திகதி பத்திரிகையாளர் மாநாட்டை கிளிநொச்சியில் கூட்டி, இத்தீர்வின் உள்ளடக்கத்தை பத்திரிகைகளுக்கு வெளியிட்ட போது தமிழ்ச்செல்வன் கூறியதாவது, எமது தாயகத்தில் சட்ட விரோதமாக எம்மை ஆக்கிரமித்த இராணுவத்திற்கு எதிராக ஓர் தற்பாதுகாப்பிற்காக நாம் ஆயுதம் ஏந்துகிறோம். சமாதானத்திலும் அரசியல் பேச்சுவார்த்தையிலும் நம்பிக்கை கொண்ட நிலையில் அவற்றில் நாம் முழு விசுவாசமாக கலந்து கொள்கிறோம்.

தற்போதைய சமாதான முன்னெடுப்புக் காலங்களில் தெற்கில் உள்ள மக்களே வடக்கு-கிழக்கு மக்களைவிட மேலாக பயன்பெற்றுள்ளார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் வடக்கு-கிழக்கில் இடம்பெயர்ந்தும், வீடுகளை இழந்தும் வேலைகள் அற்றும் வாழ்க்கை சீர்குலைந்துள்ளார்கள். பேச்சுவார்த்தை காலங்களில் இதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட, சிரான் என்ற குழுவும் செயலிழந்து உள்ளது. இந்நிலையில், பேச்சுவார்த்தை மூலம் ஓர் நிரந்தர தீர்வை அடைய மாதங்கள், வருடங்கள் செல்லலாம். அதன் முன் எமது மக்களின் அவசர தேவைகளை நிவர்த்தி செய்ய நாம் ஆவன செய்ய வேண்டியுள்ளது. இந்த வகையில் நாம் இந்த இடைக்காலத் தீர்வை நோர்வே அரசு மூலமாக இலங்கை அரசிடம் கையளிக்கும் வேளை இத்தீர்வு பற்றி இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த ஒழுங்கு செய்யுமாறு நோர்வே அரசிடம் வேண்டுகிறோம் என தனது உரையில் கூறினார்.

2003ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் திகதி தமிழ்ச்செல்வனினால் மேலே கூறப்பட்ட வாக்கியங்களை இலங்கை அரசு அலட்சியம் செய்துள்ளது என்பதை சர்வதேச சமுதாயம் கவனத்தில் கொண்டிருக்கும் என்று நாம் நம்புகிறோம். இராஜதந்திரியும் அரசியல் பொறுப்பாளருமான தமிழ்ச்செல்வன் உலகின் பல பாகங்களிலும் உள்ள பல நாட்டு இராஜதந்திரிகள், பல அரசியல் தலைவர்கள், அமைச்சர்களைச் சந்தித்து வடக்கு-கிழக்கு மக்களின் உண்மை நிலைபற்றி உரையாடியுள்ளார். இலங்கை விமானப்படையின் இந்தத் தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம். தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட மற்றைய ஐவர்களுக்கும் எமது ஆழ்ந்த கவலையை தெரிவித்துக் கொள்கின்றோம்.

## இராசிபலன்

04.11.2007
(ஐப்பசி 18, ஞாயிற்றுக்கிழமை)
தசமி முன்னிரவு 08.32 மணிவரை
மகரம் பிற்பகல் 12.52மணிவரை
இராகுகாலம் 04.39-06.04 மணிவரை
சுபநேரம் 09.04-10.34 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | மனச்சஞ்சலம், முயற்சி தாமதமாகும், கௌரவக்குறைவு, குடும்பக்கவலை. |
| இடபம் | பயந்த சுபாவம், அற்பர் உறவு, புதிய விடயம், உறவினர் சந்திப்பு. |
| மிதுனம் | கூட்டுமுயற்சி, இனிய அனுபவம், போசன சுகம், சகோதரர் உதவி. |
| கடகம் | கௌரவக்குறைவு, அதிக செலவு, வேலைச்சுமை, முயற்சி தாமதம். |
| சிங்கம் | ஆழ்ந்த சிந்தை, நண்பர்கள் உதவி, சயனசுகம், புதிய பொருள் சேர்க்கை. |
| கன்னி | பிதா சிந்தை, காரிய அலைச்சல், பிரயாணம், சயனசுகக்குறைவு.. |
| துலாம் | மனமகிழ்ச்சி, தொழில்சிந்தை, முயற்சி கைகூடும், போசனசுகம். |
| விருச்சிகம் | அதிக பிரயாசை, பிறர் உதவி, ஆரோக்கியம், நல்ல தகவல். |
| தனுசு | உடல் உழைப்பு, வீண்பயம், கட்டுப்பாடு, திடீர் நன்மை. |
| மகரம் | வீண்பகை, காரிய தடங்கல், ஆரோக்கியக் குறைவு, போசனசுகம். |
| கும்பம் | திடீர் பயணம், அபூர்வசந்திப்பு, பொருள் சேர்க்கை, நல்ல செய்தி. |
| மீனம் | சத்துருஜெயம், காரிய சித்தி, உடல் நலம், விருந்துபசாரம். |

வளவன்

# வலிகாமம் கல்வி வலயம் சிற்ப சித்திரப் போட்டி

வலிகாமம் கல்வி வலயம் நடத்திய சிற்ப, சித்திரப் போட்டி முடிபுகள் வருமாறு,

சிற்பப் போட்டி- பிரிவு1 (தரம்6,7)1 ஆம் இடம்-பா.கௌதமன்(அராலி சரஸ்வதி ம.வி), 2ஆம் இடம்-இ.ரகுசாந் (தொல்புரம் விக்னேஸ்வரா வித்.), 3ஆம் இடம்-ம.ரினால்ட்(அராலி சரஸ்வதி ம.வி),ம.தேவதர்சினி(சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி.)

பிரிவு2-(தரம் 8,9) 1 ஆம் இடம் ஆ. கௌதமி (வட்டு. மத்திய கல்லூரி), 2 ஆம் இடம் - ந.மதுசிகா (இராமநாதன் கல்லூரி) ,3 ஆம் இடம்-க.தபோதரன் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி),த.வினோத் (தொல்புரம் விக்னேஸ்வரா)

பிரிவு 3 (தரம் 10, 11) 1 ஆம் இடம் ம. கலாரஞ்சனி (இணுவில் மத்திய கல்லூரி),2-ம் இடம்-யோ.அரவிந்தன்(இணுவில் மத்திய கல்லூரி), 3ஆம் இடம்-பா. ஆதவன் (அராலி சரஸ்வதி ம.வி.), சி.ஜெயரூபி (வட்டு.மத்திய கல்லூரி)

பிரிவு 4 (தரம் 12, 13) 1ஆம் இடம்-ம.பானுதன் (இணுவில் மத்திய கல்லூரி),2 ஆம் இடம் யோ.சிவேந்தன் (இணுவில் மத்திய கல்லூரி), 3ஆம் இடம் யோ.சுதாகரன் (விக்ரோறியாக் கல்லூரி),த.லிங்கேஸ்வரன் (விக்ரோறியாக் கல்லூரி)

சித்திரப்போட்டி-பிரிவு 1

1ஆம் இடம்-பா.பாலஜீவன் (இணுவில் மத்திய கல்லூரி),2ஆம் இடம்-இ.கஜன் (சென். ஆன்ஸ் றோ.க.பாடசாலை),3ஆம் இடம் - பா.கனிஸ்ரன்(இணுவில் ம்த்திய கல்லூரி).

பிரிவு 2-1ஆம் இடம்-ஜெ.நிரோஜன் (அராலி சரஸ்வதி ம.வித்),2ஆம் இடம்- சி.நிரோஜன் (இணுவில் மத்திய கல்லூரி),3ஆம் இடம்-ம.வாகீசன் (அராலி சரஸ்வதி ம.வித்)

பிரிவு 3-1ஆம் இடம்-யோ.அரவிந்தன் இணுவில் மத்திய கல்லூரி),2ஆம் இடம்-யோ.தேவமலர் (பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை),3ஆம் இடம்-தே.பபிராஜ்(இணுவில் மத்திய கல்லூரி)

பிரிவு 4 -1ஆம் இடம்-யோ.சிவேந்தன் (இணுவில் மத்திய கல்லூரி),2ஆம் இடம்-ஸ்ரீ.வாகீசன்(இணுவில் மத்திய கல்லூரி), 3ஆம் இடம்-வ.சண்முகராசா (வட்டு.மத்திய கல்லூரி). (4)


# இலங்கையில் தினசரி 5பேர் கொலை அல்லது காணாமல் போகிறார்கள்

## சட்டமும் சமூகமும் அமைப்பு

இலங்கையில் தினமும் ஐந்து பேர் ஒன்றில் கொலை செய்யப்படுகிறார்கள் அல்லது காணாமல் போய்விடுகிறார்கள் என சட்டமும் சமூகமும் அமைப்பு (Law and Society Trust) மோசமான மனித உரிமை மீறல் சம்பந்தமான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு சமர்ப்பித்த இரண்டாவது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் திகதி தொடக்கம் ஒகஸ்ட் மாதம் 31ஆம் திகதிக்குட்பட்ட காலத்தில் 14 மனிதாபிமான சமயத் தலைவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார் ஒன்பது மனிதாபிமான ஊழியர்கள் காணாமல் போயிருக்கிறார்கள். மூன்று ஊடகவியலாளர்கள் கொலைசெய்யப்பட்டிருக்கிறார்கள். ஐவர் காணாமல் போயிருக்கிறார்கள் என மேற்படி அமைப்பின் இணைப்பாளர் றுகி பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

மக்கள் கண்காணிப்புக்குழுவுடனும் சுதந்திர ஊடகவியலாளர் அமைப்புடனும் இணைந்து மேற்படி அமைப்பு தயாரித்த அறிக்கையில் மேற்குறிப்பிட்ட கால எல்லையில் 662 பேர் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் 540 காணாமல் போயுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதே காலப்பகுதியில் 25 சிறுவர்கள் கொலை செய்யப்பட்டதுடன் 43 பேர் காணாமல் போயுள்ளார்கள்எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.





பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட 6 மாவீரர்களுக்கான சுவீடனில் நடைபெற்ற வீரவணக்க நிகழ்வின் படத்தொகுப்பு





பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட 6 மாவீரர்களுக்கான கனடா ரொறன்ரோவில் நடைபெற்ற வீரவணக்க நிகழ்வுகளின் படத்தொகுப்பு

வேண்டுமென்றே செய்யப்பட்ட தவறு
மன்னிக்கப்படக் கூடாததாகும்.
—அப்துற் ரஹீம்

வலம்புரி

# சமாதான முயற்சிக்கு குந்தகம் நேர்ந்துவிட்டது

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில்– வன்னிப்பிராந்தியத்தில் அரச யுத்த விமானங்கள் நடத்திய குண்டுவீச்சில் விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உட்பட ஆறு விடுதலைப்புலி உறுப்பினர்கள் மரணமடைந்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின் மறைவு விடுதலைப் புலிகளுக்கு மட்டுமன்றி உலகுவாழ் தமிழ் மக்களையும் அதிர்ச்சிக்காளாக்கியுள்ளது.

அரசியல்துறை தலைவரான தமிழ்ச்செல்வன் விடுதலைப்புலிகளின் சார்பில் சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டவர்.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடந்த ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தையின் போதும் ஜனாதிபதி மகிந்தவின் ஆட்சியில்–ஜெனீவாவில் நடந்த பேச்சுவார்த்தையிலும் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமை தாங்கியிருந்தார்.

இப் பேச்சுவார்த்தையின்போது அரச தலைவர்கள் அவருடன் அன்னியோன்னியமாக பழகினர். அதேபோல் தமிழ்ச்செல்வனும் இலங்கை அரசின் சார்பில் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட அமைச்சர்களுடன் அளவளாவி பழகினார்.

இதற்கு மேலாக சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட பின்னர் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் மிக்க ஒருவராகவும் தமிழ்ச்செல்வன் அறியப்பட்டார்.

இவ்வாறு சமாதான வழியில் அறியப்பட்ட விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளரை விமானத்தாக்குதல் மூலம் இலங்கை அரசு கொன்றுவிட்டது.

இந் நிகழ்வானது பல கோணங்களில் ஒவ்வொருவரும் தம் தம் வசதிக்கேற்ப விமர்சனப் பார்வையை முடுக்கிவிட்டிருந்தாலும் ஒட்டுமொத்தமான– அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட முடிபு சமாதானத்திற்கு குந்தகம் ஏற்பட்டுவிட்டதென்பதாகும்.

அரசும் விடுதலைப்புலிகளும் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தையில் சந்திப்பர் என்ற அற்ப சொற்ப நம்பிக்கைகளும் தமிழ்ச்செல்வனின் மறைவோடு இல்லாது போய்விட்டது.

ஆக, இப்போது இலங்கைத் தீவு மிக இக்கட்டான சூழ்நிலைக்குள் அகப்பட்டுள்ளது. இந்த துரதிர்ஷ்டவசமான சூழ்நிலையை தெரிந்து கொள்ளாதவர்கள் தமிழ்ச்செல்வனின் மறைவில் மகிழ்வடைகின்றனர். இவ்விதம் மகிழ்வடைவது நாகரிகம் அன்று.

இழப்புக்கள் எந்நேரமும் எந்தப் பக்கமும் இடம்பெறலாம். அந்த இழப்புக்களால் ஏற்படப்போகும் இழப்புக்கள் எவ்வாறு அமையும் என்பதை சிந்தித்து நோக்குவதே அறிவுடையோர் பண்பாகும்.

# வடக்குக் கிழக்கில் அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் உள்ளூராட்சித் தேர்தல்

சமீபத்தில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இரு சட்டங்களைத் தொடர்ந்து வடக்கு , கிழக்கு மாகாணங்களிலுள்ள அனேக உள்ளூராட்சி அமைப்புக்களுக்கான தேர்தல் 2008 ஆம் ஆண்டு முதல் இரண்டு மாதங்களில் நடைபெறுமென மாகாண சபைகள் , உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் 16 பிரதேச சபைகளுக்கும் , இரண்டு நகர சபைகளுக்கும் இரண்டு மாகாண சபைகளுக்கும் வட மா கா ணத்தில் ஒரு மாநகர சபை , ஐந்து ந[illegible]ரசபை 27 பிரதேச சபைகளுக்கான தேர்தல்களுக்கான வேட்[illegible] மனுக்கள் ஏற்கனவே கோரப்பட்டிருந்த போதிலும் பாதுக[illegible]பு காரணங்களைமுன்னிட்டு அவை நடாத்தப்பட வில்லை.

சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட உள்ளூராட்சி சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்படி அரசாங்கம் இவ்வேட்பு மனுக்களை இரத்துச்செய்துள்ளது. இச்சட்டத்தின்பிரகாரம் மாகாணசபைகள் , உள்ளூராட்சி அமைச்சர் புதிய தேர்தலுக்கான வேட்பு மனுக்கள்கோரப்படும் திகதிகளை அறிவிப்பார்.

2008 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதமளவில் கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி தேர்தல்களுக்கான வேட்பு மனுக்களைக் கோருவதற்கான திகதிகளையும் அதன்பின்னர் வடமாகாணஉள்ளூராட்சி தேர்தலுக்கான வேட்பு மனுக்களைக் கோருவதற்கான திகதிகளையும் அறிவிப்பதாக அமைச்சர் தென்னக்கோன் டெயிலி மிரர் பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார். வேட்பு மனு தாக்கல் செய்யப்படும் தினத்தன்று தேர்தல் திணைக்களம் தேர்தலுக்கான திகதிகளை அறிவிக்கும்.

உணர்ச்சி பூர்வமான இத்தகைய விடயங்களில் அவசரமாக தீர்மானம் எதனையும் எடுக்க முடியாது . வடக்கு , கிழக்கு, தேர்தல் நடத்துவது குறித்து பாதுகாப்பு உட்பட சகல விடயங்களையும் அரசாங்கம்கவனத்தில் கொள்ளும். சமீபத்தில் இராணுவ வெற்றி யின் பின் கிழக்கில் உள்ளூராட்சி தேர்தலை நடாத்துவது பெரிய விடயமல்ல வெனினும் வடக்கில் நடத்துவது குறித்து அவதானமாகச் செயற்பட வேண்டுமென அமைச்சர் அப்பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளார்.(து-5)

## நாவற்குழியில் 'மகிந்தபுரம்' மாதிரிக் கிராமம்

நாவற்குழியில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் கீழ் உள்ள பகுதியை மகிந்தபுரம்என்ற பெயரில் மாதிரி மீள் குடியேற்றத்திட்டமாக அமைப்பதற்கு இலங்கை அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் முன்வைக்கப்பட்ட திட்டத் திற்கமைய நாவற்குழியில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கீழுள்ள 168 வீடுகள் அடங்கிய பகுதியை யாழ். அரசாங்க அதிபரிடம் மாற்றிக் கொடுக்குமாறு கேட்கப்படும். யாழ். அரச அதிபர் அவ்வீடுகளுக்கான திருத்த வேலைகளை மேற்கொள்வதுடன் உட்கட்டமைப்பு வேலைகளையும் மேற்கொண்டு பாவனைக்குரியதாக்குவார் எனவும் அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் இடம் பெயர்ந்த மற்றும்வறிய குடும்பங்களுக்கு தலா ரூபா 30 ஆயிரம் பெறுமதியான மீன்பிடி , தச்சுவேலை, மேசன்வேலை, தையல்வேலை மற்றும் கால்நடைவளர்ப்புக்கான ஊக்குவிக்கும் வாழ்வாதார உதவியுடன் இவ்வீடுகளும் வழங்கப்படும் எனவும் கூறப்பட்டது. (அ-5-6)

## 2007 (உ/த) பரீட்சையில் சித்தியடைவோரில் 10 ஆயிரம் பேருக்கு தாதியர் பயிற்சி

2007 ஆம் ஆண்டு க.பொ .த( உயர்தர ) பரீட்சையில் விஞ்ஞானப்பிரிவில் சித்தியடைந்த 10 ஆயிரம் பேரை தாதியர் பயிற்சிக்குத் தெரிவு செய்ய சுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்துள்ளார். அடுத்த வருட முடிபுக்குள் தாதியர் வெற்றிடங்கள் யாவும் நிரப்பப்பட்டு விடுமென்றும் அவர் தெரிவித்தார்.

தற்பொழுது 15 ஆயிரம் தாதியர்மாத்திரமே சேவையில்உள்ளனரென்றும் 4 ஆயிரம் பேர் 19 பயிற்சிக்கல்லூரியில் பயிற்சி பெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

உலகில் வேறு எந்த வொரு நாட்டிலும்இல்லாத விதத்தில் 100 வீத இலவச வைத்திய வசதி இலங்கையில் மாத்திரமே இருக்கிறது என்றும் சீனாவில் வைத்திய சேவை முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டுள்ளதால் அரசாங்கத்துக்கு சுமையாகஇல்லை என்றும் முழு இலங்கையும் உள்ளடக்கி முழுமையான காப்புறுதி திட்டமொன்று விரைவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.(அ-5)

## ஆஸ்துமா நோய் பற்றிய கருத்தரங்கும் நூல் வெளியீடும்

ஆஸ்துமா நோயானது ஒருவருடைய வாழ்க்கையினைப் பாதிப்படையச் செய்யக்கூடிய நோய் எனினும் இந் நோய்க்கான சிகிச்சை மிக இலகுவானதும். அதன் மூலம் நோயினைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம் ஒருவர் தனது நாளாந்தச் செயற்பாடுகளில் மற்றவர்களைப்போல ஈடுபடக்கூடியவர்களாக இருப்பார்கள்.

இந்நோயாளிகளும் அவர்களது உறவினர்களும் இந் நோய்பற்றிய முழுமையான அறிவினைப்பெற்றிருப்பது , நோய்நிலைமையினை இலகுவாகக் கையாளவும் நோயினைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்து ஆரோக்கியமாக வாழ்வதற்கும் வழிவகுக்கும்.

இந்த வகையில் ஆஸ்துமா பற்றிய அடிப்படைத் தகவல்களை இதுவரை பத்திரிகைகள் மூலம் அறிந்திருப் பீர்கள்.

ஆஸ்துமா பற்றிய முழுமையான தகவல்களைப் பெறுவதற்கும்
உங்களுடைய ஆஸ்துமா நோய்பற்றிய சந்தேகங்களை
யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்களிடம்
ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் இன்று யாழ்.
இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நிகழும் இலவச மருத்துவக்
கருத்தரங்கில் கலந்து பயன்பெறுமாறு
அனைவரையும் அழைக்கின்றோம்.

நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் : சமுதாய மருத்துவத்துறை, மருத்துவபீடம்,
யாழ். பல்கலைக்கழகம். (மூற்றும்)

## பிரித்தானிய உயர் ஸ்தானிகராக கலாநிதி பீட்டர் ஹெயிஸ் நியமனம்

இலங்கைக்கான பிரித்தானிய நாட்டின் புதிய உயர் ஸ்தானிகராக கலாநிதி பீட்டர் ஹெயிஸ் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஜனவரி முதலாம்திகதி முதல் தனது கடமையைப் பொறுப்பேற்கவுள்ளார் என இலங்கையிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

இலங்கைக்கான பிரித்தானிய உயர் ஸ்தானிகராக கடமையாற்றிய டொமினிக் சில்கொட் தனது பதவிக்காலத்தை முடித்துக்கொண்டு வேறு ஒரு பதவியேற்கவுள்ளமையினாலேயே புதிய உயர் ஸ்தானிகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

2005 முதல் இவ்வருடம் 2007 இறுதிவரை பிரித்தானிய வெளிவிவகார அமைச்சில் வெளியுறவுத்துறை அமைச்சருக்கானமுதன்மைப் பிரத்தியேக செயலாளராக இவர் கடமையாற்றுகிறார். அத்துடன் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சில் பல உயர் பதவிகளையும் வகித்துள்ளார் எனவும் இலங்கைக்கான பிரித்தானிய தூதரகம் வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-5)

# இயேசுவின் பாதையில் பயணத்தைத் தொடர்வோம்!

இறந்தவர்களை நினைவு கூர்வோம்;-

கார்த்திகை மாதம் இறந்த உறவுகளை நினைக்கின்ற மாதம் . எம்மை விட்டு பிரிந்த எம் பெற்றோர் சகோதர சகோதரிகள் இறைபதம் சேர்ந்து விட வேண்டும் என்பதற்கு அவர்களுக்காக வேண்டுகின்ற மாதம் . எம்மை கடந்த கால



த்தின் பிழையான வாழ்வுகளில் இருந்து திருந்தி வாழவும் இம் மாதம் எமக்குப் படிப்பினையாகவும் அமைந்துள்ளது. மரணங்கள்மனிதனின் மனத்தை மாற்ற வேண்டும். உணர் வுகளைச் சீர்ப்படுத்த வேண்டும். ஓர் ஆன்மா அழிந்து போகாமல் இறைவனுக்கு உகந்த வாழ்க்கைவாழ வழிகாட்ட வேண்டும். மற்றவரிலே அவரின் வாழ்க்கையிலே குறைகண்டு பிடிக்கின்றவர்கள் அனேகர் இருக்கின்றார்கள். தமது செயற்பாடுகளே சரியானவை என்று சொல்வதோடு ஏனையோர் செய்யும்செயல்கள் முறையற்றவை என்பதை நியாயப்படுத்துவார்கள். இதைத்தான் இயேசு கூறுகின்றார்."நீ உனது கண்ணில் உள்ள துரும்பை எடுக்காமல் மற்றவர் கண்களில் இருக்கும் விட்டத்தைப் பார்ப்பதேன் "

புளிக்காரங்களாக வாழ்வோம்:-

இவ்வுலக வாழ்வு குறுகிய ஒரு காலப்பகுதியாகும். எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தோம் என்பதைவிட எப்படியான வாழ்க்கை வாழ்ந்தோம்என்று சிந்திப்பதே மேலானது.போரும் பயப்பீதியும்நிறைந்த வாழ்விலே புளிக்காரம்போல இருந்து எம்மால் இயன்ற நன்மைகளைச் செய்து கொண்டே இருக்க வேண்டும். இயேசுவின் வாழ்வு, விவேகானந்தரின் வாழ்வு , பாரதியின் வாழ்வு எல்லாம் குறைந்த ஆண்டுகாலப் பகுதிகளில் முடிவடைந்தவையாகும். அவ்வாழ்வுகளின் பின்னே ஒரு சரித்திரம் இருக்கின்றது. சரித்திரத்தின் நாயகர்கள் சாவதில்லை. அவர்கள் மக்களின் மனங்களில் வாழ் கின்றார்கள். இயேசு சரித்திர நாயகன் மட்டுமல்ல சரித்திரத்தையே

**மரமிதா காட்டிய மாதை**

முன் பின்னாகப் பிரிக்கின்ற இறைவனாகவும் ஆனார்.

இயேசுவை வாழ்வாக்குவோம்:-

வானமும் வையமும் படைத்தவன். மண்வந்து விண் சென்ற வெற்றி வீரன் இயேசுவின் வழியில் எம் பயணங்களை ப்பலப்படுத்துவோம். கிறிஸ்தவனுக்கு மரணங்கள் முடிவல்ல . மாறாக நிலை வாழ்வின்திறவு கோலாகும். வாழுங் காலத்தில் இறைவனுக்குகந்த நல்வாழ்வு வாழ்வோம்

**அன்ரனி பீற்றர்**

இயேசு காட்டிச் சென்ற முன்மாதிரிகைகளை எம் வாழ்வாக்குவோம். புனிதத்துவம்நிறைந்த பாதைகளில் பயணிப்போம். பொல்லாகவர்களின் பிடியில் நின்று அகன்று நல்லவை செய்



வீரச்சாவடைந்த ஐந்து போராளிகளினதும் இறுதிச்சடங்கு நேற்று இடம்பெற்றபோது...

# அமைதியின் மீது வீழ்ந்த அடி
# அரசியல்துறைப் பொறுப்பாளர் நடேசன்

(கிளிநொச்சி)

பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் மீதான தாக்குதல் அமைதியின் மீது வீழ்ந்த அடி என்று தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்துள்ளார்; கிளிநொச்சியில் நேற்று சனிக்கிழமை முற்பகல் நடைபெற்ற பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் அவருடன் வீரச்சாவைத்தழுவிக் கொண்ட 5 மாவீரர்களின் வீரவணக்க நிகழ்வில் கலந்து கொண்டு அவர் ஆற்றிய உரையில், எமது மக்களின் விடிவுக்காக சுதந்திரவேட்கை கொண்டு அதற்காக தம்மை முழுமையாக அர்ப்பணித்த இம் மாவீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்துகின்றோம்.

எமது விடுதலைப் போராட்டத்தில் நேற்றைய நாள் மறக்க முடியாத நாள். இலங்கை வான் படையினர் நேற்றைய நாள் காலை 6 மணியளவில் எமது போராளிகள் மீது தாக்குதலை மேற்கொண்டார்கள். பிரிகேடியர் சு.ப.தமிழ்ச் செல்வனுடன் ஐந்து போராளிகளும் வீரச்சாவடைந்தனர்.

அமைதி முயற்சிகளின் சின்னமான இடத்தின் மீதுதான் அரசின் வான் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனும் ஐந்து போராளிகளும் ஆற்றிய பணிகளை இன்றைய சூழலில் வார்த்தைகளினால் சொல்ல முடியாது. ஆனால் அவர்களின் ஈகங்கள் அர்ப்பணிப்புகள் வரலாற்றில் பொன் எழுத்துக்களினால் பதியப்படும்.

ஏனெனில் எமது விடுதலைப் போராட்டத்தில் எமது இயக்கத்தின் வரலாற்றில் போராளிகள் செய்யும் ஈகங்கள், அர்ப்பணிப்புக்கள் பதிவுகளாக இடம்பெறும். பிரிகேடியர் சு.ப.தமிழ்ச் செல்வனுக்கு லெப்.கேணல் அன்புமணி வலது கையாக இருந்து அர்ப்பணிப்புக்களை செய்தவர். மேஜர் மிகுதன், மேஜர் கலைச்செல்வன் ,லெப்.மாவைகுமரன், லெப்.ஆட்சிவேல் ஆகியோர் மக்களுக்காக ஈகங்கள் செய்தனர்.

அம்மாவீரர்களின் இழப்பால் தமிழீழத் தேசமே துயரத்தில் ஆழ்ந்துள்ளது. புலம் பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் எமது உறவுகள் துயரில் ஆழ்ந்துள்ளனர். ஆகவே எல்லோருடைய மனங்களிலும் அம் மாவீரர்களின் இழப்பு அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. அது மட்டுமல்ல; அம் மாவீரர்களின் இழப்பால் அரசின் செயலால் தமிழீழத் தேசியத் தலைவரின் தலைமையில் எமது விடுதலையை வென்றெடுப்பதற்கான எழுச்சியை எமது தேசம் கொண்டிருக்கின்றது.

ஆக மாவீரர்களின் இழப்பால் எல்லோருடைய இதயங்களும் எமது தேசம் விரைவில் மீட்கப்படவேண்டும் என்ற அவா ஆட்கொண்டிருப்பதை உணரமுடிகிறது. பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வன் மீதான தாக்குதல் அமைதி முயற்சிக்கு வீழ்ந்த அடியாகும்.

அரசின் கோழைத்தனமான செயல்களை நாம் பல முறை கண்டிருக்கின்றோம். அரசானது பயங்கரவாத முகத்தினை தமிழர் தேசத்திற்கு மட்டுமல்ல, பன்னாட்டு சமூகத்திற்கும் அண்மை நாட்களாக காட்டி வருகிறது. அரச பயங்கரவாதத்தை பன்னாட்டு சமூகம் விரைவில் புரிந்துகொண்டு எமது சுதந்திரப்போராட்டத்தை அங்கீகரிக்கும் என்பதை ஆணித்தரமாக கூறுகின்றேன்.

அம் மாவீரர்கள் விட்டுச் சென்ற பணியை நாம் தொடர்ந்து சென்று எமது சுதந்திரத்தை வென்றெடுப்பதற்கு உறுதி எடுப்போம் என்றார் பா.நடேசன். (ந-5)

## ஐந்து போராளிகளின்...

அகவணக்கம் செலுத்தினர்.

மாவீரர்களின் வித்துடல்களுக்கு விடுதலைப் புலிகளின் கட்டளைத்தளபதிகளில் ஒருவரான கேணல் பால்ராஜ், படைத் தொடக்கப் பயிற்சி பள்ளிகளின் சிறப்புத்தளபதி கேணல் ஆதவன், வவுனியா மாவட்ட கட்டளைத் தளபதி வேலவன், கட்டளைத் தளபதி ரமேஸ், கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன், விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் மற்றும் ஆயிரக்கணக்கான பொதுமக்களும் தமது இறுதி வணக்கத்தை செலுத்தினர்.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதானச் செயலகப்பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் வீரவணக்க உரைகளை நிகழ்த்தினர். அதன் பின்னர் கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் ஐந்து மாவீரர்களின் வித்துடல்கள் பிற்பகல் 2.00 மணியளவில் அடக்கம் செய்யப்பட்டது.

(ந-5)

## தமிழ்ச்செல்வனின் மறைவு...

கூறியுள்ளார். இதேவேளை இலங்கை அமைதி முயற்சிகளுக்கு முன்னர் பொறுப்பாக இருந்த விதார் ஹெல்கிசன் கருத்துத் தெரிவிக்கையில், பத்து ஆண்டுகளுக்கு மேலாக தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளராகவும் அமைதிப்பேச்சுக்களில் முக்கிய பங்கு வகித்தவர் சு.ப.தமிழ்ச்செல்வன் என்று கூறியுள்ளார். (ந-5)

## என் அன்புத்தம்பி...

மனங்களை வென்ற ஒரு தன்னிகர் அற்ற தலைவனை சிங்களம் பலிகொண்டிருக்கிறது. எமது சுதந்திர இயக்கத்தின் அரசியல்துறை பொறுப்பாளர் பிரிகேடியர் தமிழ்ச்செல்வனையும் ஏனைய ஐந்து போராளிகளையும் இழந்து இன்று தமிழீழ தேசம் வரலாற்றில் என்றுமில்லாத ஒரு பேரிழப்பை சந்தித்திருக்கிறது. இந்த மாபெரும் சோக நிகழ்வு எம்மக்களை அதிர்ச்சியிலும் ஆழ்ந்த துயரத்திலும் ஆழ்த்தியுள்ளது. தமிழ்ச்செல்வன் எமது சுதந்திர இயக்கத்தில் இணைந்த காலத்திலிருந்தே என்னோடு, ஒன்றாக நெருக்கமாக வாழ்ந்தவன். நான் அவனை ஆழமாக அறிந்து, ஆழமாக நேசித்தேன். எனது அன்புத் தம்பியாகவே வளர்த்தேன். அவனது அழகிய சிரிப்பும் அதனுள் புதைந்த ஆயிரம் அர்த்தங்களையும் அவனுள் அடர்ந்து கிடந்த ஆற்றல்களையும் ஆளுமைகளையும் நான் ஆரம்பத்திலிருந்தே கண்டு கொண்டேன்.

இலட்சியப் போராளியாக, தலைசிறந்த தானைத்தளபதியாக, மாபெரும் அரசியல் பொறுப்பாளராக அனைத்துலகோடு உறவாடிய இராஜதந்திரியாக பேராற்றல் மிக்க பேச்சுவார்த்தையாளனாக அவனை வளர்த்தெடுத்தேன்.

தான் நேசித்த மண் விடுதலை பெறவேண்டும். தான் நேசித்த மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழவேண்டும் என்று சதா சிந்தித்தான். தான் நேசித்த அந்த மக்களது விடுதலைக்காக விடிவிற்காக தன்னையே ஊனாக உருக்கி உறுதியாக உழைத்த ஒரு இலட்சிய நெருப்பு அவன்.

நீண்ட நெருப்பு நதியாக நகரும் எமது விடுதலை வரலாற்றில் அவன் ஒரு புதிய நெருப்பாக இணைந்திருக்கிறான். இந்த இணைவிலே, எமது கனத்த இதயங்களில் ஒரு பெரும் இலட்சிய நெருப்பை மூட்டியிருக்கிறான். எமது இலட்சிய உறுதிக்கு உரமேற்றியிருக்கிறான். இந்த உறுதியில் உரம்பெற்று நாம் எமது இலட்சியப் பாதையில் தொடர்ந்தும் உறுதியோடு பயணிப்போம்.

வே.பிரபாகரன்

தலைவர்

தமிழீழ விடுதலைப்புலிகள். என அவ்விசேட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## தமிழ்ச்செல்வனின்...

தமிழ்ச்செல்வன் கொல்லப்பட்டமைக்கு நாங்கள் கொடுக்கும் பதிலடியை சொல்லில் கூறப்போவதில்லை மாறாக செயலில் காண்பிப்போம் என்று விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

லண்டன் பி.பி.ஸி செய்திச் சேவைக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்நேர்காணலில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

விமானப் படை தாக்குதலில் தமிழ்ச்செல்வனும் ஐந்து போராளிகளும் கொல்லப்பட்ட பின்னர் விடுதலைப் புலிகள் வெளியிட்ட முதல் கருத்து இதுவாகும்.

தாக்குதல் எவ்வாறு நடையெறும் என்பது குறித்து கருத்துக்களை வெளியிடாத இராசையா இளந்திரையன் தாக்குதல் ஆச்சரியப்படத் தக்க வகையில் இருக்குமென்றும் கூறியுள்ளார்.

தமிழ்ச்செல்வன் கொல்லப்பட்டமையானது ஏற்கனவே இரத்தக்களரியில் தோய்ந்து போயிருக்கும் இலங்கை உள்நாட்டு போரை உக்கிரப்படுத்துவதோடு பேச்சுவார்த்தைக்கான வாய்ப்புக்களை இன்னும் கடினமாக்குமா? என்ற கேள்விக்கு பதிலளித்த விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் சில காலமாக இருந்த வாய்ப்புப்பாதை ஒன்று மூடப்பட்டு விட்டதாக தெரிவித்தார். (ந-5)


NEW SCIENCE HALL

2008 A/L CHEMISTRY

By.க.சிவத்திரன் B.Sc (Hons)

(மீள் பரீட்சார்த்திகளுக்குரியது)

1) மாதிரி வினா விடை வகுப்பு
கடந்த கால,வெற்றி நிச்சயம், வேறு மாவட்டம்,தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் இன்னும் பல வினாக்கள்.
ஆரம்பம் 06.11.2007 Tue 11.30-12.30
Tue, Thur 11.30 -12.30

2) பௌதிக இரசாயனம் (Theory)
ஆரம்பம் 09.11.2007 Fri 11.30-1.00

3) சேதன இரசாயனம் (Theory)
ஆரம்பம் 10.11.2007 Sat 2.15-3.45

4) அசேதன இரசாயனம் (Theory)
ஆரம்பம் 11.11.2007 Sun 2.15-3.45

5) கடந்த கால இறுதிப்பரீட்சை வினா விடை வகுப்பு அலகு ரீதியாக ஆரம்பத்தில் இருந்து நடைபெறுகிறது.
(1978 to 2007) Mon to Fri 10.00-11.30 (526)

WESTERN UNION பணப்பரிமாற்றம்

அப்பணத்தினை பாதுகாப்பாகவும், விரைவாகவும் பெற்றுக்

சங்கீதா ஏஜென்ட்

எம்மிடம் பணப்பரிமாற்றம் செய்து கொள்ளும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் பெறுமதிக்கேற்ப அன்பளிப்புக்கள் வழங்கப்படும்.

இல. 412, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

மத்திய பஸ் நிலையம் முன்பாக (HNB அருகாமை)

தொலைபேசி : 021222 8559 பக்ஸ் : 021 222 8546

(சி-512)

Closing Down Sale!

அனைத்து ஆடை வகைகளும்

மகாநதி புடவையகம்

இல.04, நவீன சந்தை, சாவகச்சேரி

விற்றுத் தீர்த்தல்

(சி-506)


... வலம்புரி ... ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.11.2007 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.